விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 309 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை (24.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# போதைவஸ்து வியாபாரிகள்
# நிதி, ஆயுத பலத்துடன் உள்ளனர்

## அவர்களை ஒழிக்க அரசு வலுவாகப் போராட வேண்டியுள்ளது
## ஊடகப் பிரதானிகள் முன்னிலையில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

நாட்டில் பாதாள உலகக்குழுவும் போதைவஸ்து வர்த்தகர்களும் பலம் பெற்றவர்களாக இருக்கின்றனர். அவர்களிடம் நிதிப்பலமும் ஆயுத பலமும் இருக்கின்றது. இதனால் அவர்களை எதிர்ப்பதில் அரசு வலுவாகச் செயற்பட வேண்டியுள்ளது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



## வட - கிழக்கில் காற்றழுத்தம்

### மழைக்கு வாய்ப்பு மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் நிலவும் சீரற்ற காலநிலை 15ஆம் பக்கம் பார்க்க

### ஏற்றுமதி வருமானம்

## 13 பில்லியன்களாக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதி வருமானம் சுமார் 13 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

### போதை வியாபாரிகளுடன் தொடர்புடைய

## 300 பொலிஸார் இடைநிறுத்தம்

(கொழும்பு)

போதை வியாபாரிகளுடன் தொடர்புடைய சுமார் 300 பொலிஸார் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஜனா 02ஆம் பக்கம் பார்க்க

## செயல்திறன் அற்ற 33 அரச நிறுவனங்கள் கலைக்கப்படும் அல்லது இணைக்கப்படும்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

செயல்திறன் அற்ற 33 அரச நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அவை அனைத்தும் கலைக்கப்படும் அல்லது வேறு திணைக்களங்களுடன் இணைக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஊடகப் பிரதானிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். 15ஆம் பக்கம் பார்க்க



### காரைநகரில்

## இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகரில் வாயாலும் மூக்காலும் இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் பாண்டித்தாழ்வு, காரைநகரைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கோணலிங்கம் சுந்தரலிங்கம் (வயது-47) 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக் கிழக்கில் இராணுவ வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர

(கொழும்பு)

2025ஆம் ஆண்டில் இதுவரை வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவப் பயன்பாட்டில் இருந்த 672 ஏக்கர் அரசாங்கக் காணிகளை விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

நேற்று பாராளு 15ஆம் பக்கம் பார்க்க



## ஐஸ் போதை, கத்தியுடன் யாழில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கத்தியுடன் இரு இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருவர் ஐஸ் போதையுடன் மற்றையவர் ஐஸ் மற்றும் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். 23 மற்றும் 25 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் 02ஆம் பக்கம் பார்க்க

### 2025ஆம் ஆண்டு

## 1947 ஆயுதங்கள் சோதனையில் மீட்பு

(கொழும்பு)

இலங்கையில் பாதாள உலகக் குழு மற்றும் போதைப்பொருள் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக நடத்தப்பட்ட சிறப்புச் சோதனைகளின் போது இந்த ஆண்டில் மாத்திரம் 15ஆம் பக்கம் பார்க்க

### வடமராட்சி வெற்றிலைக்கேணியில்

## மீன்பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளி மரணம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் மீன்பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த துரைராசா நிருட்டன் 15ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைவஸ்து...

நேற்றையதினம் ஜனாதிபதி செயலகத்தில் ஊடகப் பிரதானிகளுடன் நடைபெற்ற விசேட சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் போதைவஸ்து வியாபாரம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. போதை வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு அரசியல் வாதிகளின் துணையும் நிதிப்பலமும் ஆயுத பலமும் உண்டு.

பொலிஸார் சிலர் அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கியுள்ளனர். அண்மையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் T-56 ரகத் துப்பாக்கியை போதைவஸ்து வியாபாரிக்கு விற்றுவிட்டு வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார்.

இதைவிட போதைவஸ்து வியாபாரிகள் அரசியலில் ஈடுபடுவதற்கும் தயாராகியிருக்கின்றனர். எனவே நாட்டுக்கு கேடு விளைவிக்கக் கூடிய போதை வஸ்து வியாபாரிகளை இல்லாது ஒழிப்பதற்கு ஊடகங்கள் கடுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

நாட்டில் பாடசாலை மாணவர்கள் மட்டததிலும் போதைவஸ்து வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எனினும் அச்சம் காரணமாக ஆசிரியர்கள் அதனைக் கண்டு கொள்ளாமல் மறைப்புச் செய்கின்றனர்.

பாடசாலைகள் மட்டுமன்றி, குறித்த சில பல்கலைக்கழகங்களிலும் போதை வியாபாரம் பரவியுள்ளது.

முன்னைய ஆட்சிக் காலத்தில் சில பல்கலைக்கழகங்களில் போதைவஸ்தை வியாபாரம் செய்வதற்கென்றே தனி அறைகள் இருந்தன.

இப்போது அவை ஒழிக்கப்பட்டுள்ளன. எனவே நாட்டுக்கு மிகவும் கேடாக அமையக்கூடிய போதை வஸ்தை நாம் கட்டுப்படுத்தாவிட்டால் எதிர்காலச் சந்ததியினர் அவலமான வாழ்வை எதிர் கொள்ளவேண்டி வரும். மேலும் போதைவஸ்து பயன்பாடு காரணமாக குடும்பங்களிடையே சண்டைகளும் சச்சரவுகளும் ஏற்படுகின்றன. பிள்ளைகள் போதைக்கு அடிமையாகி இருப்பதனால் பெற்றோர்கள் மிகுந்த துயரமடைகின்றனர். வறுமையில் வாடுகின்றனர். போதைக்கு அடிமையானவர்கள் களவிலும் குற்றச்செயலிலும் ஈடுபடுவதைக் காண முடிகிறது.

அண்மைக்காலத் தரவுகளின் படி பிரபலமான நட்சத்திர விடுதிகளில் வெளிநாட்டவர்களுடைய உடைமைகள் களவாடப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இவ்வாறு களவாடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில் குறித்த விடுதியில் பணியாற்றுகின்ற போதைக்கு அடிமையான ஊழியர்களே அந்தக் களவைச் செய்துள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளது என்றார்.

(ம-7)

## பாதாள உலகுடன் டீல் வைத்த
# அரசியல்வாதிகளின் விபரங்கள் விரைவில் பகிரங்கப்படுத்தப்படும்
## அமைச்சர் விஜேபால அதிரடி

(கொழும்பு)

அடுத்தடுத்து கைது செய்யப்படும் பாதாள உலக முக்கிய புள்ளிகளிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பாதாள உலகத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் குறித்து பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தப்படும் எனப் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

நாடு முழுவதும் போதைப்பொருள் ஒரு பெரிய பிரச்சினையாக மாறி வருகிறது. எல்லா இடங்களிலும் போதைக்கு அடிமையானவர்கள் உள்ளனர். பொலிஸ், இராணுவம் மற்றும் பல்கலைக் கழகங்களில் கூட போதைப் பொருட்களைப் பயன்படுத்துபவர்கள் உள்ளனர்.

எந்தவொரு சவாலையும் நாங்கள் ஏற்றுக்கொண்டு பாதாள உலகத்தையும் போதைப்பொருட்களையும் ஒழிக்க பாடுபடுவோம்.

எவ்வளவு அவதூறுகள் மற்றும் அவமானங்களுக்கு ஆளானாலும் அதைச் செய்வோம் என்று நாங்கள் சபைக்கு உறுதியளிக்கிறோம்.

முந்தைய அரசாங்கங்களின் போது, ஒரு குறிப்பிட்ட இராணுவ முகாமிலிருந்து 78 ஆயுதங்கள் பாதாள உலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

அப்படியிருக்கையில் இனி மேலும், இந்த நாட்டில் அரசியலில் ஈடுபடும் ஒரு பாதாள உலகம் இருக்க இடமளிக்கப்படாது. பாதாள உலகுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படும் என்றார்.

(ம-7)

## 300 பொலிஸ்...

திபதி செயலகத்தில் ஊடகப் பிரதானிகளுடன் நடைபெற்ற விசேட சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போதைவஸ்து வியாபாரிகளுக்கும் பொலிஸாருக்குமிடையே நெருங்கிய தொடர்புள்ளது.

போதைவஸ்து வியாபாரிகளுடன் தொடர்புபட்ட சுமார் 300 பொலிஸார் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இதைத் தவிர படையினரிடமிருந்தும் போதைவஸ்து வியாபாரிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பிலும் இராணுவத்திடமிருந்த ஆயுதங்கள் தொடர்பிலும் சரியான கணக்கெடுப்பு இருக்கவில்லை.

இதன் காரணமாக ஆயுதங்கள் போதைவஸ்து வியாபாரிகளுக்கு வழங்கப்படக் கூடியதாக இருந்துள்ளது. குறித்த ஆயுதங்கள் தொடர்பில் சரியான கணக்கெடுப்பை மேற்கொள்ள முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

(ம-7)

## ஐஸ் போதை...

கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வாள் மற்றும் ஐஸ் போதையுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 20 இலட்சம் ரூபா பணத்தினை பொலிஸ் புலனாய்வாளர் சுதர்சனுக்கு இலஞ்சமாக வழங்க முற்பட்ட வேளை புலனாய்வுப் பிரிவினர் அதனை வாங்க மறுத்து கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் குறித்த இளைஞனை விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தி, இளைஞனிடம் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸ் காவலில் இளைஞனைத் தடுத்து வைக்க மன்றில் அனுமதி கோரினர்.

அதன் பிரகாரம் 24 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய மன்று அனுமதித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞனின் தந்தை யாழ். மாநகர சபை உறுப்பினர் என பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

(ம-7,33,104)




விற்பனைக்கு

Forklift Komatsu 2 ton (petrol)

வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு :

076 097 3121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய பாலம்

# நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்லும்



## மல்வத்து பீடாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

**இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையில் பாலம் அமைக்கப்பட்டால் சட்டவிரோத செயற்பாடுகள் மேலும் அதிகரிக்கக் கூடிய அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

குறித்த விடயத்தை மல்வத்து விகாரையின் பீடாதிபதி திபட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

விமானப்படைத் தளபதி ஏர் மார்ஷல் பந்து எதிரிசிங்க, மல்வத்தை மகா விஹாரைக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தபோது பீடாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கை இடையே கடல்வழியாக போதைப் பொருட்கள் உள்ளிட்ட சட்ட விரோதப் பொருட்கள் கடத்தப் படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்போது, நாட்டில் தற்போது அதிக எண்ணிக்கையிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு வருவதாகவும் இவை ஏதேனும் காரணத்திற்காக சமூகத்திற்குள் நுழைந்தால், பெரும் பேரழிவு வாய்ப்புள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

போதைப்பொருள் பறிமுதல் செய்யப்படும் அதேநேரம், அவற்றை இலங்கைக்குக் கொண்டு வருவதைக் கட்டுப்படுத்த அந்தந்த நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என மல்வத்து விஹாரையின் பீடாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இஷாரா செவ்வந்தி இந்தியா செல்ல உதவிய யாழ்ப்பாணத்தை சேர்ந்த முக்கிய நபர்கள் தற்போது அதிரடியாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பாதாள உலகக் குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பிற குற்றவாளிகளைப் படகு மூலம் இந்தியாவிற்கு சட்டவிரோதமாக கொண்டு செல்லும் ஒரு வலையமைப்பை அடையாளம் கண்டுள்ளது.

இந்தக் குழுவின் மூலம் கடந்த சில ஆண்டுகளில் குற்றவாளிகள் மற்றும் பாதாள உலகை துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் உட்பட சுமார் 100 பேர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது. (நி)

# சீரற்ற வானிலையால் 12,142 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற வானிலையால் 3,036 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 12,142 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக 14 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்கள் காரணமாக நான்கு உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

அண்மைய நாட்களில் தொடர்ந்து பெய்த மழையால் சுமார் 480 வீடுகள் சேதமடைந்துள்ளன.

பாதகமான வானிலையால் ஏதேனும் அவசர உதவிகள் தேவைப்பட்டால் 117 என்ற துரித இலக்கத்தின் மூலமாக தொடர்பு கொள்ளுமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது. (நி)

# பாராளுமன்றத்தில் பாதுகாப்புச் சோதனை

## சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

நவம்பர் மாதத்தில் மூன்று நாட்களுக்கு பாராளுமன்றத்தில் விசேட பாதுகாப்பு சோதனை நடத்தப்படும் என சபாநாயகர் நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதன்படி, நவம்பர் 4, 6 மற்றும் 7 ஆகிய மூன்று நாட்களில் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வறைகள் மற்றும் ஆடை அலுமாரிகள் உட்பட முழு பாராளுமன்றக் கட்டடமும் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படும் என சபாநாயகர் அறிவித்தார்.

இதற்கிடையில், நவம்பர் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றக் கட்டடத்தின் உயர் பாதுகாப்பு பகுதிகளும் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படும். அன்று பொது மக்கள் பார்வையிடும் பகுதி விருந்தினர்களுக்கு மட்டும் மட்டுப் படுத்தப்படும் என்றும் சபாநாயகர் அறிவித்துள்ளார். (நி)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1981 • 09 • 19

உதிர்வு 2019 • 10 • 30



## அமரர்.திருமதி.பிரதீப் தர்சினி

திதி:திருதியை

2025.10.24

ஆறாம் ஆண்டு மெல்ல வந்து சென்றது—ஆனால்
தர்சினியே நீயோ போகவில்லை எம் நினைவிலிருந்து
உன் சிரிப்பு இன்னும் வீடு முழுவதும் ஒலிக்குதம்மா
உன் பெயர் சொல்லும் போது கண்கள் நனைக்குது

சின்னச் சின்ன கனவுகளுடன் வலம் வந்தாய்
ஒரு நொடியில் நோய் வந்து மாற்றியதோ
மகளே நீ போன நாளிலிருந்து
வீடும் வெறிச்சோடிக் காணுதம்மா!

எங்களைக் காத்த தெய்வம் நீ
உன் நினைவு எங்கள் மூச்சில் நிறைந்தது
எம் தங்கையே நீ எப்போதும் எங்களோடு
வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்.


[illegible] வீதி,
கொடிகாமம்.

உன் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

# 1 ஆம் ஆண்டு ஆத்ம சாந்தி கிரியை அழைப்பு

கடந்த 04.11.2024 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர். வேலுப்பிள்ளை கதிரவேலு



அவர்களின் 1 ஆம் ஆண்டு நினைவுக்
கிரியைகள் இன்று 24.10.2025
வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது.
அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம்
வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதி வீதி,
தம்பாலை, அச்சுவேலி.

(C-4172)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத் திரைப்படக் காட்சி

புகழ்பெற்ற சிங்கள எழுத்தாளரான மார்ட்டின் விக்கிரமசிங்க எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்ட 'விராகய' சிங்களத் திரைப்படம், நாளை சனிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு, 18/2, அம்மன்வீதி (பலாலி வீதியிலுள்ள வீனஸ் மருத்துவ மனை அருகில்), கந்தர்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள, 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தில் இலவசக் காட்சியாகத் திரையிடப்படவுள்ளது.

ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடனுள்ள இத் திரைப்படக் காட்சி, யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் 17 ஆவது, மாதாந்தத் திரையிடல் நிகழ்ச்சியாகும். (8)

## மகளிர் உலகக்கிண்ணம்

# அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தது பாகிஸ்தான்



13 ஆவது மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்ற 22 ஆவது லீக் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணி கள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது. மழை குறுக்கிட்டதால் போட்டி 40 ஓவராகக் குறைக்கப்பட்டது.

அதன்படி, முதலில் ஆடிய தென் ஆபிரிக்கா அணி 40 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 312 ஓட்டங்கள் குவித்தது.

கப்டன் லோரா 82 பந்துகளில் 90 ஓட்டங் கள் குவித்தார். லூஸ் 59 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்து அட்டமிழந்தார். அந்த அணியின் மரிசனி கெப் 43 பந்துகளில் 68 ஓட்டங்கள் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளார்.

மீண்டும் மழை குறுக்கிட்டதால் 20 ஓவர்களில் 234 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. பாகிஸ்தான் வீராங்கனை கள் சீரான இடைவெளியில் விக்கெட் களை இழந்த னர்.

இறுதியில், பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 83 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 150 ஓட்டங்கள் வித்தியாசத் தில் தென் ஆபிரிக்கா அபார வெற்றி பெற்றது.

அத்துடன், புள்ளிப்பட்டிய லில் முதலிடத்துக்கு முன்னேறியது. பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு முன்னேறாமல் வெளியேறியது. (3)

# யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வர்த்தகர்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் தமது யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சகல வர்த்தகர்களுடனும் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.நகர வர்த்தகர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

எனவே சகல வர்த்தகர்களையும் இக்கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு யாழ்.வணிகர் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (8)

# கேள்வி அறிவித்தல் - 2026

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் கருவாட்டுக்கடை என்பவற்றை 2026.01.01ஆம் திகதி தொடக்கம் 2026.12.31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் காலம்: 2025.10.24 தொடக்கம் 2025.11.06 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00-பி.ப. 3.00 மணி**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: 2025.11.07 மு.ப.10.00 மணி வரை**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 2025.11.07 மு.ப.10.00 மணி**

1. கேள்விப்பத்திரங்கள் 02 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி உட்பட 02 பிரதிகளையும் "தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு உரிய காலப்பகுதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கெனத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கே உள்ளது.
6. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. மாத வாடகையானது விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மீள்மதிப்பீட்டுத்தொகைக்கமைய அறவிடப்படும்.
8. சந்தையிலிருந்து 500M சுற்றுவட்டத்துக்குள் கடலுணவு, இறைச்சி, மரக்கறி, கருவாடு விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
9. குத்தகை,வாடகைக் கட்டணங்களுடன் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் வரியினையும் செலுத்துதல் வேண்டும்.
10. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை குறிப்பிடப்படும் காலப்பகுதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
11. கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (VAT, NBT நீங்கலான) | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை 2026(VAT,NBT நீங்கலான) | மாதாந்த வாடகை (VAT,NBT நீங்கலான) |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச்சந்தை (மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, வாகனபாதுகாப்பு மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 50,600.00 | 5,060,100.00 | - |
| 2 | மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 68,200.00 | 3,500.00 |
| 3 | மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 18,400.00 | 1,837,000.00 | 3,500.00 |
| 4 | மானிப்பாய் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,200.00 | 515,900.00 | 3,500.00 |
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | | |
| 1 | காக்கைதீவு மீன் சந்தை (மேற்குப் பகுதி புதிய கட்டடம்) (வாகன பாதுகாப்பு மற்றும் பொது மலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 9,100.00 | 908,200.00 | - |
| 2 | நவாலி பிரசாத் பொதுச்சந்தை | 1,000.00 | 1,400.00 | 144,400.00 | - |
| 3 | நவாலி பிரசாத் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,700.00 | 567,600.00 | 2000.00 |
| 4 | நவாலி பிரசாத் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 41,300.00 | 2000.00 |
| 5 | சாவல்கட்டுச் சந்தை | 1,000.00 | 3,200.00 | 316,800.00 | - |
| பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 1,000.00 | 72,600.00 | 7,260,000.00 | - |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 39,800.00 | 3,982,330.00 | 4,000.00 |
| 3 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 9,000.00 | 904,200.00 | 4,000.00 |
| 4 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,000.00 | 1,000.00 | 29,500.00 | 4,000.00 |
| 5 | சாந்தைச் சந்தை | 1,000.00 | 9,500.00 | 947,100.00 | - |
| பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | | |
| 1 | இளவாலை பொதுச் சந்தை | 1,000.00 | 1,700.00 | 171,400.00 | - |
| 2 | இளவாலை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 4,600.00 | 462,210.00 | 1,300.00 |
| 3 | இளவாலை பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 88,200.00 | 1,300.00 |
| 4 | மாசியபிட்டி பொதுச்சந்தை | 1,000.00 | 4,200.00 | 421,300.00 | - |
| 5 | மாசியபிட்டி பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,700.00 | 572,000.00 | 1,500.00 |
| 6 | மாசியபிட்டி பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 4,000.00 | 401,600.00 | 1,500.00 |
| 7 | மாதகல் பொதுச்சந்தை | 1,000.00 | 4,500.00 | 442,200.00 | - |
| 8 | மாதகல் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,100.00 | 314,600.00 | 1,250.00 |
| 9 | மாதகல் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 38,500.00 | 1,250.00 |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(C-4174)

**திகதி: 24.10.2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் புதுப்பொலிவுடன் திருநாவுக்கரசர் சிலை




(சாவகச்சேரி)

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் மாணவர்களால் சேதப்படுத்தப்பட்ட திருநாவுக்கரசர் சிலை மீண்டும் அதே மாணவர்களுடைய நிதிப்பங்களிப்பில் கலைஞானி குமரநாதனின் கைவண்ணத்தில் அமைக்கப்பட்டு அண்மையில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் பாடசாலைக்கு கலைஞானி குமரநாதனால் திருநாவுக்கரசர் சிலை அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இரு தடவைகள் சிலை சேதப்படுத்தப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சிலையை சேதப்படுத்திய மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுடைய நிதிப்பங்களிப்பில் மீளவும் கலைஞானி குமரநாதனால் சிலை அமைக்கப்பட்டு தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுதர்சனால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-30)

## யாழ்.முஸ்லிம் சமூக ஜோதி விருது—2025



யாழ் முஸ்லிம் சமூக ஊடகம் நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் வழங்கும் யாழ். முஸ்லிம் சமூக ஜோதி விருது 2025 இற்கு அறுவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். விருதுக்கு அனுசரணையாளர் யாழ்.மாநகர சபை உறுப்பினர் B.S.M சரபுல் அனாம் ஆவார். முன்னாள் ஒஸ்மானியா கல்லூரி அதிபரும் சமூகப்பற்றாளருமான M.A.R.A றஹீம், யாழ். முஸ்லிம் சமுதாயத்தில் முதலாவது பெண் சட்டத்தரணி றயீஷா கான், யாழ் மத்திய கல்லூரியின் முன்னாள் திறமை பதித்த கிரிக்கெட் வீரர் நஸீர் சுல்தான், யாழ் முஸ்லிம் சமுதாயத்தில் முன்னாள் திறமை பதித்த உதைபந்தாட்ட வீரர்கள் மாமுனா மரைக்கார் ஜசூர், றாவுத்தர் முஸாதீக், S.R றமீஸ் ஆகியோர்களாவர். (C-4173)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை மயிலிட்டி உப அலுவலகம்
## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

விண்ணப்பதாரர் துரைசிங்கம் விஜயகுமார் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட தெல்லிப்பளை வல்லை வீதி என்னும் முகவரியில் அமைந்துள்ள கட்டுவன் இறை "விளாப்பந்தை" என்ற ஆதனம் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 16 ஆதன இலக்கம் 310,312 தெல்லிப்பளை வல்லை வீதியில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.கஸ்தூரி அகளங்கன் முகதாவில் உறுதி இலக்கம் 285 ஆம் இலக்கத்தில் 2022.04.02 அன்று நிறைவேறிய நன்கொடை உறுதியின் பிரகாரம் குறித்த துரைசிங்கம் விஜயகுமார் சொந்தமும் உரிமையுமாய் இருந்து வந்தது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்றும் கட்டுவன் இறை "விளாப்பத்தை" இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் M.சண்முகநாதன் அவர்களின் வரைபட இலக்கம் 5709 இன் படிதுண்டு 1 ஆகும்.

**இதற்குஎல்லைகள்**

கிழக்கு: பத்து அடி அகலப்பாதை

வடக்கு : தெல்லிப்பளை கட்டுவன் வீதி


மேற்கு : மிகுதி ஆதனம்

தெற்கு : மிகுதி ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை துரைசிங்கம் விஜயகுமார் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

(5716)



## எனது 34 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே... நாளை (25.10.2025) 34 ஆம் வருடப் பூர்த்தி விசேட பூஜை வழிபாடுகள்

**காலம்: 25.10.2025 சனி விநாயக சதுர்த்தி அன்று**
**நேரம்: பி.ப 3.00 மணியளவில் ஆரம்பமாகி விசேட அபிஷேக பூஜை வழிபாடுகளுடன் சுவாமி வீதி உலா நடைபெறும்.**

*என் அன்பு உள்ளங்களே!*

**ஈசுர விநாயகரின் அருளாசியே எமக்கு வேண்டும்.**

கடந்த (01.09.2025) அன்று வட்டுக்கோட்டைக் காவல் துறை உதவிப் பொறுப்பதிகாரி எமது தேவஸ்தானத்திற்கு வருகை தந்து 159 ஆவது பொலிஸ் தின விழாவை முன்னிட்டு பறாளை ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாடுகளை நடாத்த விரும்புகின்றோம். சாமியைக் கேட்டு வரும்படி பொறுப்பதிகாரி கூறியுள்ளார். அது காரணமாக வந்துள்ளோம் என்றார். இதற்கு அடியேன் உங்கள் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள கோயில் ஒன்றில் பூஜை வழிபாடுகளை நடத்தினால் உங்கள் எல்லோருக்கும் வசதியாக இருக்கும் என்றேன். இல்லை இல்லை எங்களுக்கு ஈசுர விநாயகரின் அருளாசியும். சாமியின் ஆசிர்வாதமும் தேவை என்றார்கள். மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை.

பறாளாய் என்பதன் கருத்து என்ன என்றும் கேட்டார்கள். பிறரது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இடம் என்றேன். பின்னர் (03.09.2025) புதன் அன்று பி.ப 4.00 மணியளவில் விசேட பூஜை வழிபாடுகளை ஒழுங்கு செய்யுங்கள் நாங்கள் அனைவரும் பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்ள வருவோம் என்றார்கள்.

அவ்வாறே (03.09.2025) புதன் அன்று மாலை 4.00 மணியளவில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் உயரதிகாரிகள் எனப்பலரும் பூஜை வழிபாடுகளில் கலந்து விழாவைச் சிறப்பித்தனர். இவ்விழாவில் பொது மக்களும் கலந்து கொண்டமை ஒரு சிறப்பம்சமாகும்.

இவ்விழாவில் அடியேன் உறையாற்றும் போது இன்றைய காலகட்டத்தில் உடனடித் தேவையாக உள்ளதும் பேசுபொருளாக இருப்பது மனித உயிர்கொல்லிப் போதைக் கலாசாரத்தை விரைவாக அழிக்க வேண்டும் என்பதாகும்.

இது நாட்டின் அனைத்து மக்களின் தலையாய கடமையாகும். இது எப்படி? பொது மக்களாகிய நீங்கள் போதை வர்த்தகர்களையும் போதை கடத்துபவர்களையும் இனம்கண்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுப்பதன் மூலமே இப்போதைக் கலாசாரத்தை அழிக்க முடியும். பொதுமக்களாகிய உங்களின் உதவியே பொலிஸாருக்கு மிக மிக முக்கியம் என்பதை நாம் அனைவரும் உணர்வோமாக.

எனவே போதைக் காலசாரத்தை நாட்டிலிருந்து விரட்டியடித்து நாட்டையும் மக்களையும் காப்போமாக.

பின்னர் ஈசுர விநாகரின் ஆசிர்வாதத்துடன் பொலிஸ் தினவிழா இனிதே நிறைவுற்றது. அத்துடன் ஈசுர விநாயகரின் அருட் பிரசாதமும் வழங்கப்பட்டது.

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
**(ஆன்மிகவாதியும் சந்ததிப் பூசகரும் பரம்பரைப் பரிபாலகரும்)**
**24.10.2025**

(5715)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டைமானாறு உவர்நீர் தடுப்பணையால்

# வெள்ளப்பாதிப்பினை எதிர்கொள்வோருக்கு தீர்வினை வழங்குங்கள்-தவிசாளர் நிரோஷ்



(புத்தூர்)

தொண்டைமானாறு உவர் நீர்த் தடுப்பணைத் திட்டத்தினை நாம் வரவேற்கின்றோம். அதேயிடத்தில் இத் திட்டத்தினால் வருடாவருடம் வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்ளும் மக்களை காப்பாற்றுவதற்கான நிலைத்தகு திட்டத்தினை மாகாண நிதி ஒதுக்கீடுகளுக்குள்ளாகவோ அல்லது சர்வதேச தாபனங்களின் ஒத்துழைப்புடனோ நிறைவேற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் ஆளுநர் நா. வேதநாயகனுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இச் சந்திப்பிலேயே வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மேற்படி கோரிக்கையினை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கான பெரும் அர்ப்பணிப்பினை வலிகாமம் கிழக்குப் பிரதேசமே மேற்கொள்கின்றது. தொண்டைமானாறு மற்றும் செம்மணி நீரேரிகள் எமது ஆட்சிப் பகுதிக்கு உட்பட்டவை. நிலத்தடி நீரைப்பாதுகாப்பதற்கான உவர் நீர்த்தடுப்புத் திட்டம் இங்கு செயற்படுத்தப்படுவதனால் எமது மக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வெள்ளப்பாதிப்பினை எதிர்கொள்கின்றார்கள். அவ்வாறாக மக்கள் பாதிக்கப்படும் போதும் மக்களை நாம் நிலத்தடி நீர்ப்பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக பாதிப்புக்களை சகித்துவாழ பல அரச கட்டமைப்பு கோருகின்றது.

நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டத்துடன் இணைந்த உப திட்டங்கள் வகுக்கப்பட்டு அதன் வாயிலாக மக்களை வெள்ளப்பாதிப்பில் இருந்து நாம் பாதுகாக்கவேண்டும். அவ்வாறான திட்டங்கள் நிலைத்தகு சிந்தனையுடன் நடைமுறைப்படுத்தப்படும் போது மக்கள் எதிர்கொண்டுள்ள வெள்ளப்பாதிப்பிற்கு தீர்வு காணலாம். ஒவ்வொரு வருடமும் அச்சுவேலி வடக்கு, தெற்கு, ஆவரங்காலின் ஒருபகுதி, வாதரவத்தை, புத்தூர் கிழக்கு என வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் பல பகுதி வெள்ளப் பாதிப்பிற்கு உள்ளாகின்றது. இதில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடர் நிலையை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான நிலையில் மாகாண சபை கூட தனது குறித்தொதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்படி மக்களுக்கு சிறந்த திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி மக்களின் பாதிப்புக்களைக் குறைக்கலாம்.

உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச கொடையாளர்களிடம் மேற்படி உவர் நீர்த் தடுப்பணை நன்னீர்த்திட்டத்தினை பேணுவதனால் பாதிக்கப்படும் மக்களுக்கான பாதிப்பை நிவர்த்தி செய்யத்தக்க திட்டத்தினை மேற்கொள்ள நிதி கோரிக்கையினை ஆளுநர் முன்வைக்க வேண்டும் என தவிசாளர் நிரோஷ் கோரிக்கை விடுத்தார். இதனைத்தொடர்ந்து கருத்தரைத்த ஆளுநர் சர்வதேச த்திட்டங்களில் வாயிலாக பாதிக்கப்படும் மக்களை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (8)

# தென்தீபம் - இதழ் 9 இற்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

தீவுகள் தெற்கு வேலணை பிரதேச கலாசாரப் பேரவையினால் ஆவணப்படுத்தும் வகையிலமைந்து வெளியிடப்படவுள்ள தென்தீபம் இதழ் 9 இற்கான ஆக்கங்கள் வேலணை பிரதேசத்தைச் சார்ந்த எழுத்தாளர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள், வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வேலணை பிரதேசத்திலுள்ள அரச சேவை அலுவலக உத்தியோகத்தர்களிடமிருந்தும் மற்றும் வேலணை பிரதேசம் சார்ந்த ஆக்கங்களை வழங்க விரும்பும் ஏனைய பிரதேசத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

வேலணை பிரதேசத்தின் கலை, கலாசாரம், வரலாறு, வழக்காறுகள், கிராம நாமங்கள், சமூக வாழ்வியல், தொல்லியல் மரபுரிமைகள், கிராம நாமங்கள், நாட்டுப்புறவியல், ஆன்மீகம் போன்ற பண்பாட்டம்சங்களை பிரதிபலிக்கும் வகையிலான ஆய்வுக் கட்டுரைகள், கவிதை, சிறுகதை, ஆவணத்தரவுகள் நேர்காணல்கள், பல்சுவை அம்சங்கள் போன்ற ஆக்கங்களை வழங்க முடியும்.

படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையிலும் பிரதேசத்தின் தரவுகளை ஆவணப்படுத்தி வெளிக்கொணரும் வகையில் இவ் இதழானது அமையவுள்ளது.

ஆக்கங்களை வழங்க விரும்புவோர் எதிர்வரும் 31.03.2026 இற்கு முன்னர் வேலணை பிரதேச கலாசார பிரிவில் வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வேலணை அல்லது செயலாளர், வேலணை பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியுமெனவும் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் கலாசார பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்திற்கமைவாக தென்தீபம்-இதழ் 9 இல் உள்ளடக்கப்படுமெனவும் அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் தொடர்பிலான பொறுப்புக்கள் அனைத்தும் படைப்பாளியையே் சாரும் என்பதனை உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும் எனவும் தீவுகள் தெற்கு வேலணை பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான த. அகிலன் தெரிவித்துள்ளார். (8)

# வெள்ள வாய்க்கால் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## தவிசாளர் குகதாஸ்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வெள்ள வாய்க்கால்களையும் விரைவில் சீர்செய்து வெள்ள அனர்த்தத்தை குறைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், தொழில்நுட்ப ரீதியான இழு பறி நிலைமை காரணமாக 2025ஆம் ஆண்டிற்கான சபைநிதி வேலைகள் சில முடிவுறுத்தப்படாமல் உள்ளன.

தற்போது பிரதேசத்தில் வெள்ள வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சகல உறுப்பினர்களும் பிரதேசசபை ஊடாக ஜே.சி.பி வாகனத்தைப் பெற்று தமது வட்டாரங்களில் உள்ள வெள்ள வாய்க்கால்களை சீர்செய்ய முடியும்.

சில இடங்களில் வெள்ள வாய்க்கால்கள் இயற்கையாக தடைப்பட்டுள்ளன. சில இடங்களில் செயற்கையாக தடை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றினை இதன்போது சீர் செய்ய வேண்டும்.

அத்துடன் 2025 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டத்தில் சில வீதிப் பணிகள் நிறைவுறுத்தப்படாமல் உள்ளன. அவற்றையும் சீர் செய்யுமாறு உரிய ஒப்பந்தகாரருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார். (8-30)



யாழ். போதனா வைத்தியசாலை விசேட சிசு பராமரிப்பு பிரிவிற்கு புதிய வெண்டிலேட்டர் (Neonatal Ventilator) ஒன்றை அவுஸ்திரேலிய மருத்துவ உதவி நிறுவனம் (Australia Medical Aid Foundation) அண்மையில் வழங்கி வைத்தது.

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 200 | 250 | 150-200 | 100 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 | 240 | 185-200 | 220 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 300 | 300 | 220 | 170 |
| தக்காளி | 200 | 250 | 250 | 300 | 220 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 280 | 150 | 220 | 80 |
| கோவா | 250 | 180 | 200 | 200 | 160 | 130 |
| கரட் | 250 | 250 | 250 | 300 | 220 | 150 |
| பூசணி | 80 | 70 | 100 | 60 | 50 | 70 |
| புடோல் | 250 | 300 | 150 | 250 | -- | -- |
| வாழைக்காய் | 150 | 80 | 100 | 150 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 250 | 350 | 150-220 | 210 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 200 | 150 | 145 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 500 | 400 | 250 |
| வெண்டக்காய் | 150 | 280 | 200 | 300 | 200 | 110 |
| கருணைக் கிழங்கு | 300 | 200 | 250 | 300 | -- | 220 |
| பயற்றங்காய் | 600 | 450 | 500 | 600 | 400 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 250 | 160 | 120 |
| பீற்றூட் | 200 | 100 | 250 | 120 | 100 | 100 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 400 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 250 | 400 | 150 | 125 |
| போஞ்சி | 400 | 500 | 400 | 500 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 300 | 200 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 80-160 | 150 | 100 | -- | -- |
| தேசிக்காய் | 1200 | 1800 | 2000 | 1400 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-200 | -- | 150 |
| இராசவள்ளி | 700 | 900 | 1000 | 800 | -- | 600 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 500 | 480 | -- | -- |
| முள்ளங்கி | 150 | -- | 150 | 200 | -- | 60 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 60 | -- | 35 |
| வல்லாரை | 80 | 50 | 80 | 80 | -- | 40 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 200 | --- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்

(சாவகச்சேரி)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கமானது 62 ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான புராணபடனப் போட்டி, கதாப்பிரசங்கம், சொற்பொழிவு ஆகிய போட்டிகளை எதிர்வரும் 1, 2 ஆம் திகதிகளில் யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு நடத்தவுள்ளது.

மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தங்கள் முழுப்பெயர், தரம், கற்கும் அறநெறிப் பாடசாலை,வட்ப் இலக்கம் ஆகியவற்றை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னராக 077 719 7067 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சைவ மாநாடு 62 ஆவது பட்டமளிப்பு விழாவின் போது சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-30)

# இலக்கிய ஆக்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கியத்தின் வளத்திற்கு பங்களிக்க கூடிய புதிய தலைமுறை எழுத்தாளர்களை வளர்க்கும் நோக்குடன் அரச இலக்கியக்குழு கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கைக் கலைக் கழகம் ஆகியவை இணைந்து "நிர்மாண யாத்திரை -2025" என்ற தலைப்பில் ஒருபடைப்பிலக்கிய போட்டியை ஏற்பாடு செய்துள்ளன.

அந்த வகையில் கவிதை, சிறுகதை, ஆக்கங்களை தமிழ், ஆங்கிலம் அல்லது சிங்களத்தில் சமர்ப்பிக்கலாம்.

குறித்த ஆக்கங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர்( இலக்கியப் போட்டி-2025) இலங்கைக் கலைக்கழகம், இரண்டாம் கட்டடம் (4 ஆவது தளம்) சென்சிரிபாய பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் அல்லது நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு 071 209 4209 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.(நி-8)

# 'இன்புளுயன்ஸா' பரவல் தீவிரம்!
## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் இன்புளுயன்ஸா ஏ மற்றும் பி தொற்றுகள் வேகமாக அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இதில் சிறுவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். மழைக்காலங்களிலும், ஆண்டு இறுதியிலும் பருவ கால தொற்றுநோய் மிகவும் தீவிரமாக இருக்கும்.

பகல்நேர பராமரிப்பு மையங்கள், பாலர் பாடசாலைகள் மற்றும் பாடசாலை சிறுவர்கள் பாதிக்கப்படக் கூடியவர்களாக உள்ளனர் என குழந்தை மருத்துவ ஆலோசகர் மருத்துவர் மகேஷக விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பல சிறுவர்களுக்கு திடீர் காய்ச்சல், இருமல், தொண்டை வலி, மூக்கு ஒழுகுதல் மற்றும் சோர்வு ஏற்படுவதால் இந்த நோய் பல வடிவங்களில் தோன்றும்.

அதே நேரத்தில் சிலருக்கு சளி போன்ற அறிகுறிகள், காது தொற்று, சைனசிடிஸ் அல்லது மூச்சுத்திணறல், குறிப்பாக ஆஸ்துமா உள்ள வர்களுக்கு ஏற்படலாம்.

சிறுவர்களுக்கு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம். சில சமயங்களில் நீரிழப்பு ஏற்படலாம்.

மேலும் அரிதான சந்தர்ப்பங்களில், இன்புளுயன்ஸா நரம்பு மண்டலத்தை பாதிக்கலாம். 2 வயதுக் குட்பட்ட குழந்தைகள் மற்றும் நாட்பட்ட நோய்கள் உள்ள குழந்தைகள் நிமோனியா மற்றும் கடுமையான சுவாச சிக்கல்களுக்கு அதிக ஆபத்தை எதிர் கொள்கின்றனர்.

எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் அறிகுறிகளை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். விரைவான அல்லது கடினமான சுவாசம், தொடர்ச்சியான வாந்தி, பசியின்மை அல்லது அசாதாரண மயக்கம் உள்ளிட்ட கடுமையான நோயின் அறிகுறிகள் தோன்றினால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும்.

அடிக்கடி கை கழுவுதல், இருமல் வரும்போது கைகளை வைத்து மறைத்தல், நோய் வாய்ப்பட்ட குழந்தைகளை முழுமையாக குணமடையும் வரை வீட்டிலேயே வைத்திருத்தல் போன்ற தடுப்பு நடவடிக்கைகள் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மிக முக்கியமானவையாகும்.

அதிக ஆபத்துள்ள சிறுவர்களுக்கு தடுப்பூசிகள் கிடைக்கின்றன மற்றும் பரிந்துரைக்கப்படுகின்றன. பெரும்பாலான சிறுவர்கள் வீட்டிலேயே எளிய கவனிப்புடன் குணமடைகிறார்கள்.

ஆனால் எச்சரிக்கை அறிகுறிகள் அல்லது அடிப்படை நிலைமைகள் உள்ளவர்களுக்கு ஆரம்பகால மருத்துவ கவனிப்பு அவசியம். இந்த தொற்றுநோயின் போது ஏற்படும் சிக்கல்களுக்கு எதிராக விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடைமுறைகள் சிறந்த பாதுகாப்பாகும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(நி)

ஓம் திக்கரை முருகா- அலங்காரா நல்லூரா!
சந்நிதி முருகா, கதிர்காமக் கந்தா - ஓம் சரவணபவா

# கந்தசஷ்டி தினத்தில் சகல திருமுறைகள் ஓதி அறியாமை மும்மலம், மும்வினை, பிறவிப்பிணி நீங்கப் பிரார்த்திப்போம்

**மோட்ஷம் பெறும்- திருப்புகழ் -352**

**அறிவிலாப் பித்த ருன்ற னடிதொழாக் கெட்ட வஞ்சர்**
**அசடர்பேய்க் கத்தர் நன்றி யறியாத**
**அவலர்மேற் சொற்கள் கொண்டு கவிகளாக் கிப்பு கழ்ந்து**
**அவரைவாழ்த் தித்தி ரிந்து பொருள்தேடிச்**
**சிறிதுகூட் டிக்கொ ணர்ந்து தெருவுலாத் தித்தி ரிந்து**
**தெரிவைமார்க் குச்சொ ரிந்து அவமேயான்**
**திரியுமாற்க் கத்து நிந்தை யதனைமாற் றிப்ப ரிந்து**
**தெளியமோ க்ஷத்தை யென்று அருள்வாயே**
**இறைவர்மாற் றற்ற செம்பொன் வடிவம்வேற் றுப்பி ரிந்து**
**இடபமேற் கச்சி வந்த உமையாள்தன்**
**இருளைநீக் கத்த வஞ்செய் தருளநோக் கிக்கு ழைந்த**
**இறைவர்கேட் கத்த குஞ்சொ லுடையோனே**
**குறவர்கூட் டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று**
**குருவியோட் டித்தி ரிந்த தவமானைக்**
**குணமதாக் கிச்சி றந்த வடிவுகாட் டிப்பு ணர்ந்த**
**குமரகோட் டத்த மர்ந்த பெருமாளே.**

அறிவிலாத பித்தர். உனது திருவடியைத் தொழாத கெட்ட வஞ்சகர்கள். மூடர்கள். பேயின் தன்மை கொண்ட செய்கையாளர். நன்றி அறிதல் இல்லாத- பயணிகள் அவர்களிடம் புகழ்ந்து. வாழ்த்தி பொருள் தேடி. திரிகின்ற. நிலையான எமக்கு வருகின்ற நிந்தை மொழி ஒழியும் படி அருளி, என்மீது அன்பு கூர்ந்து. நான் தெளிவு பெற்று. திருப்புகழ். கந்தரந்தாதி. கந்தலங்காரம். கந்தர் அனுபூதி ஓதி- திக்கரை முருகா. அலங்காரா. நல்லூரா. சந்நிதி முருகா. கதிர்காமக் கந்தா. மனம் தெளிய மோட்சத்தை அருள்வாயே!

**எல்லார் செயலும் இறைவன் இயற்றுவதே**
**அல்லாது இலையோர் அணுவுமசை யாது எவையும்**
**நில்லாது அருளின் றேல் நீயின்று அவன் பாலில்**
**செல்லாய் அருளின்றேல் நீயின்று அவன் பாலில்**
**செல்லாய் உனது செயலும் அவன் செய்கையதே**
**கந்தபுராணம்.**

எல்லார் செய்கைகளும் சிவபெருமான் செய்விப்பனவே ஆகும். அவ்வாறு இல்லாமல் தாமே செய்யக்கூடிய செயல் ஒன்றும் இல்லை. செய்யவும் இயலாது. அவன் அருள் இல்லாமல் ஓர் அணுவும் இயங்காது/ அசையாது. எனவே உன் செயலும் அவன் செயலே ஆகும்.

கந்த்புராணம் அருளிச் செய்த கச்சியப்ப சிவாச்சாரியார் திக கடச்சக்கரச் செம் முகமைத்துனான். என்று அடியெடுத்துத் தந்தும். முருகன் தனது சரித்திரத்தை "கந்தபுராணம்" எனப் பெயரிட்டுத் தமிழில் பெரும் காப்பியமாக பாட கட்டளையிட்டுத் தந்து இறைவன் மறைந்ததும் ஆறு முகக் கடவுளை ஆகமவிதிப்படி அன்புடன் பூசை செய்த சிவாச்சாரியார் அன்புடன். சிவ அருளுடன் தந்த புராணம் சைவப் பெருங்காப்பியம் ஆகும்.

கந்தர் சஷ்டி தினம் ஆறு நாளும். யுத்த காண்டம் ஓதி சூரபன்மன் தன்னையே இழந்து அழியும் போது. முருகன் அருளால் மெய்யுணர்வு பெற்று முருகப் பெருமானை நேருக்கு நேராகப் பார்த்தும், அவன் தன்னை அறியாமலேயே பக்தி ஏற்பட்டு, கை குவித்து கும்பிட முற்படும் போது அவனது ஆணவம் தடுக்கிறது.இந்த யுத்த காண்டம் நெஞ்சுருகும் பகுதியாகும்.

சூரபன்மன் அழிந்தாலும் முருகனுக்கு ஊர்தியாகி என்றும் அழியா வாழ்வு பெறுகிறான்.

இன்று பலர். கூடுதலானவர்கள் கோபுரம் முன் அட்டாங்கநமஸ்காரம். பஞ்சாங்க நமஸ்காரம், கரம் கூப்பி சிரம்தாழ்த்தி வாழ்த்த; வாயும். நினைக்க; மட நெஞ்சும். தாழ்த்த சென்னியும் தந்த இறைவனை முன்னோர் காட்டிய வழியில் வணங்கும். அவர்களது ஆணவம் தடுகிறது.

ஆகையால் நாம் கந்தபுராணம் ஓதியும் இறைவனை வழிபடுவோம்.

"காதல் மழை பொழிந்த அருள் கொண்டலான
கச்சியப்பன் இருபாதம் உச்சிவைப்போம்"

குமரகோட்டத்து அருச்சகர் கச்சியப்ப சிவாச்சாரியதாம் பாடிய [illegible] ஆரம்பப் பூசையின் பின் கந்தன் திருவடிக்கீழ் வைக்க. மறுநாள் காலையில் அதில் திருத்தங்கள் காணப்படும். கந்தபுராணத்தை அதன் ஆசிரியரது அன்புக்கு ஈடுபட்டு முருகவேள் அப்போதைக்கு பார்த்துத் திருத்திக் கொடுத்த அன்பின் சக்தியைக் குறிக்கும் தெய்வீகப்புராணம்.

இதுபுராணம் பல புலவர்கள் 11 ஆம் நூற்றாண்டின் இறுதியும் எனவும். இலங்கையில் கந்தபுராண உரையாசிரியரான யாழ்ப்பாணம் சுப்பிரமணிய சாஸ்திரிகளால் 1000 வருடங்களுக்கு முன்பு கந்த புராணம் இயற்றப்பட்டது. எனவும் அறியலாம். திருவாவடுதுறை ஆதினத்தின் "நாவலர்" என ஆறு இல்லாத ஊரில் ஆறாகப் பெருகும் மதிப்பான ஆறுமுக நாவலர் எனப் பாராட்டுப் பெற்று யாழ்ப்பாணம் கந்தபுராண மகிமையை நாம் நம் சந்ததிக்கு வழிகாட்டி எல்லோரும் ஓதுவோம்.

நாம் ஆறுநாளும் திருப்புகழ். கந்தர் ஆநுபூதி கந்தர் அலங்காரம், சண்முககவசம் மற்றும் திருமுறைகள் ஓதியும். ஆலயத்தில் ஆசார சீலராக வந்து பிறவார்த்தை பேசாதும், மனதில் இறைவன் சிந்தனையுடன் முருகப் பெருமானை வழிபட்டு நம் அறியாமை, மும்மலம், மும்வினை பிறவிப் பிணி நீங்கி எம் பெருமான் பேரருள் பெற்று உய்வோம்.

இந்த சமய ஆலோசனைகளை, அறிவுகளை பிரதிகள் எடுத்தோ அல்லது பத்திரிகையில் இருந்து வேறாக்கி எடுத்தோ ஆவணப்படுத்தி உங்களது வருங் காலச் சந்ததிக்கு கையளித்தால் முருகப் பெருமானுடைய திருவருள் கடாட்சம் உங்களது ஈரேழு தலைமுறைக்கும் துணையாய் நின்றருளும்.

(C-4171)


க.கு.க.சிவபாலன் (k.k.k)
சிவநெறிப்புரவலர்,
பாஞ்ச சண்யம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## ‘கொசுவே இல்லை’ என்ற பெருமையை இழந்த ஐஸ்லாந்து



(ஐஸ்லாந்து)

கடுங்குளிர் பிரதேச மான ஐஸ்லாந்து நாட்டில், முதன் முதலாக கொசு இருப்பது கண்டறியப்பட் டுள்ளது.

ஐரோப்பிய நாடான ஐஸ்லாந்து, உலகில் கொசுக்களே இல்லாத நாடு என்று பரவலாக அறி யப்படுகிறது. இனப்பெருக் கம் செய்யத் தேவையான, நிலையான மிதமான வெப்பநிலை இல்லாத தால், அங்கு கொசுக்கள் இல்லாமல் இருந்தன.

ஆனால், பருவநிலை மாறுபாடு பிரச்சினை, ஐஸ்லாந்தையும் விட்டு வைக்கவில்லை. தலை நகரான ரெய்க் ஜாவிக் நகரின் தென்மேற்கில் உள்ள பனிப்பாறை பள்ளத்தாக்கான கிஜோசில் கொசுக்கள் இருப்பதை ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

ஹஜால்டசன் என்பவர் உள்ளூர் உயிரினங்கள் தொடர்பாக, சமூக வலை தளத்தில் சில பூச்சி படங்களை பகிர்ந்துள் ளார். அதில், ஒரு விசித்திரமான ஈ போன்ற பூச்சி இருப்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

ஹஜால்டசன் அந்த பூச்சிகளை அடையாளம் காண, ஐஸ்லாந்தின் இயற்கை வரலாற்று நிறுவனத்திற்கு அனுப் பினார். அங்கு பூச்சியியல் வல்லுநர், அது “குலி செட்டா அன்னுலாட்டா” என்ற ஒரு கொசு வகை என்பதை உறுதி செய்தார்.

இந்த இனங்கள் ஐரோப்பா மற்றும் வட ஆபிரிக்காவின் சில பகுதி களில் காணப்படுபவை. கப்பல் கன்டெய்னர்கள் வழியாக அந்த கொசுக்கள் வந்திருக்கலாம் என, ஊகிக்கப்படுகிறது.

பொதுவாக, ஐஸ்லாந்து மே மாதத்தில் 20 டிகிரி செல்ஷியஸிற்கும் அதிக மான வெப்பநிலையை அரிதாகவே கொண்டிருக் கும். அந்த வெப்ப அலைகள் இரண்டு முதல் மூன்று நாட்களுக்கு மேல் நீடிக்காது என்று அந்நாட்டு வானிலை மையம் தெரி வித்துள்ளது.

ஆனால், இந்த ஆண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து 10 நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவியது. எனவே கொசு இனத்தை உருவாக்கும் அளவுக்கு ஐஸ்லாந்து வெப்பநிலை மாறிவிட்டதா என்பது இனிவரும் காலங்களில் தெரியவரும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

## கனடாவைத் தெ

# நெதன்யாகுவை கை

# முண்டியடிக்கும்

(ஒட்டாவா) ---------

**இஸ்ரேல் - காசா போரில் அமைத ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் இஸ்ரேல் பிரதமர் கால் வைத்தால் கைது செய்யப்படுவார் எனப் பல நாடுகளும் அறிவித்துள்ளமை இஸ்ரேலுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.**



இஸ்ரேல் - ஹமாஸ் இடை யேயான போரில் காசாவை தாக்கத் தொடங்கிய இஸ்ரேல் 67 ஆயிரத் திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்களை கொன்று குவித்துள் ளது.

இது இனப்படுகொலை என பல நாடுகளும் கண்டித்தன.

நெதர்லாந்து சர்வதேச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் இஸ்ரேல் பிரதமர் பெஞ் சமின் நெதன்யாகுவிற்கு பிடி

## தென்கொரியா வரும் ட்ரம்ப்

### ஏவுகணை சோதனை நடத்திய வடகொரியா

(பியாங்யாங்)

தென் கொரியாவில் அடுத்த வாரம் ஆசியா-பசிபிக் பொருளாதார மாநாடு நடக்கிறது.

இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள் ளது.

உலக நாடுகளின் வர்த்தகப் பொருளாதார தடைகளை மீறி வட கொரியா இராணுவம் அதி நவீன ஏவுகணைகளைத் தயாரித்து சோதனை நடத்தி அச்சுறுத்தி வரு கிறது.

இதற்கிடையே, தென் கொரியாவில் அடுத்த வாரம் நடக்கவுள்ள ஆசியா - பசுபிக் பொரு ளாதார மாநாட்டில் அமெ ரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது சீன ஜனாதி பதி ஜி ஜின்பிங் மற்றும் தென் கொரியாவின் புதிய ஜனாதிபதி லீ ஜே மூங் ஆகியோரை சந்தித்து ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்பதால் அங்கு பாதுகாப்பு நடவடிக் கைகள் பலப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்நிலையில், வட கொரியா இராணுவம் நேற்று முன்தினம் அதி நவீன ஏவுகணைகளை வானில் ஏவி பரிசோதனை செய்தது. கொரிய தீப கற்பத்தின் கிழக்கு கடற் கரையை நோக்கி ஏவி வடகொரியா இரா ணுவம் சோதித்தது எனத் தென் கொரியா இராணுவம் புகார் அளித்துள்ளது. (நி)



## நவீன கடல் ட்ரோ

### வெளி உலகிற்கு காட்

(கீவ்)

ரஷ்யா- உக்ரைன் இடையே 3 வருடங்களுக்கு மேலாக சண்டை நடைபெற்று வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இரு நாடுகளுக்கு இடையிலான சண்டையை முடிவுக்கு கொண்டு வர முயற்சி மேற்கொண்டு வரு கிறார். ஆனால், ரஷ்ய ஜனாதிபதி புடின் அமைதி பேச்சுவார்த்தைக்கு உடன்படாமல் உள்ளார். இதனால் சண்டை நீடித்து வருகிறது.

தற்போது இரு நாடுகளும் ட்ரோன் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றன. கருங்கடலில் ரஷ்ய கப்பல்களை தாக்க, உக்ரைன் கடல் ட்ரோன்களை (ஆளில்லா விமா னம்) பயன்படுத்தி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...தொடர்ந்து ...கைது செய்ய ...ம் நாடுகள்!




...இடை
...தாக்கத்
...ஆயிரத்
...ஸ்தீன
...ித்துள்

...ன பல

...வதேச
...ப்பட்ட
...ர் பெஞ்
...த பிடி

யாணை பிறப்பிக்கப்பட் டது.

தற்போது அமெரிக்கா தலையீட்டால் இஸ்ரேல் - காசா போர் நிறுத்தம் நடை முறையாகியுள்ள நிலையிலும் நெதன்யாகு மீதான பிடி யாணை நடைமுறையில் உள் ளது.

இதனால் பெஞ்சமின் நெதன்யாகு கனடாவிற்குள் நுழைந்தால் அவரை கைது செய்வோம் என கனடா பிரதமர் மார்க் கார்னி எச்சரித்திருந்தார்.

இந்நிலையில் பிரான்ஸ், துருக்கி, பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளும் பெஞ்சமின் நெதன்யாகு மீதான சர்வதேச பிடி யாணையை செயற் படுத்துவோம் எனக் கூறி யுள்ளதால் பரபரப்பு ஏற்பட் டுள்ளது. (நி)

## ...ல் ட்ரோன்களை ...கு காட்டிய உக்ரைன்

...யே 3
...ண்டை
...மெரிக்க
...ப் இரு
...ிலான
...ாண்டு
...டு வரு
...ாதிபதி
...தைக்கு
...னால்

...களும்
...ணகள்
...நடத்தி
...ரஷ்ய
...ன் கடல்
...விமா
...ு.

Sca Baby என அழைக்கப்படும் இந்த ட்ரோன்கள், ஆயிரம் கி.மீ. தூரம் சென்று தாக்கும் வல் லமை கொண்டது. தற்போது 1500 கி.மீ. தூரம் சென்று தாக்கும் வல்லமை கொண் டதாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இது 2 ஆயிரம் கிலோ எடை வெடிபொருட்களை சுமந்து கொண்டு தாக்குதல் நடத்தும் திறன் கொண்டது.

இந்த ட்ரோனை வெளி உலகத்திற்கு உக்ரைன் காட்டியுள்ளது. இலக்கை துல்லியமாக அளிக்க ஏஐ தொழில்நுட்பம் பயன்படுத தப்படுகிறது.

செங்கடலில் உள்ள 11 கப்பல்களை உக்ரைன் ட்ரோன் மூலம் வெற் றிகரமாக தாக்கியுள்ளது. இதில் போர்க்கப்பல் மற் றும் ஏவுகணை தாங்கிக ளும் அடங்கும். உக்ரைன் தாக்குதலால் ரஷ்யா கிரீ மியாவின் செவாஸ்டோ போலிருந்து நோவோ ரோசிய்ஸ்க் பகுதிக்கு முக்கிய தளத்தை ரஷ்யா மாற்றியுள்ளது. (நி)



# ரஷ்யா எண்ணெய் நிறுவனங்களுக்கு அமெரிக்கா புதிய தடைவிதிப்பு



(வோஷிங்டன்)

உக்ரைனில் ஒரு சமா தான ஒப்பந்தப் பேச்சு வார்த்தை நடத்த மொஸ் கோவிற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியாக, ரஷ்யாவின் இரண்டு பெரிய எண்ணெய் நிறுவ னங்களான ரோஸ்நெஃப்ட் மற்றும் லுகோயில் மீது, அமெரிக்கா புதிய தடைகளை அறிவித்துள் ளது.

புடினுடன் பேசும் ஒவ் வொரு முறையும், சிறந்த உரையாடல்களே நடத் தப்படுகின்றன. எனினும், புடின் அடுத்த கட்டத்துக்கு நகர மறுப்பதாக, ட்ரம்ப் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹங்கேரியின் புடா பெஸ்டில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் திட் டமிடப்பட்டிருந்த சந்திப்பு, காலவரையின்றி ஒத்தி வைக்கப்படும் என்று ட்ரம்ப் கூறிய மறுநாளே இந்தத் தடைகள் அறிவிக் கப்பட்டுள்ளன.

முன்னதாக, ரஷ்யா நேற்று முன்தினம் உக் ரைன் மீது கடுமையான குண்டு வீச்சை நடத்தி யுள்ளது. இந்தத் தாக்கு தலில் சிறுவர்கள் உட்பட குறைந்தது 7 பேர் கொல் லப்பட்டனர்.


இந்த நிலையில், அர்த்த மற்ற இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர புடின் மறுத்ததால்" புதிய தடைகள் தேவை என்று அமெரிக்க திறைசேரி யின் செயலாளர் ஸ்கொட் பெசென்ட் கூறியுள் ளார்.

தடை செய்யப்படும் எண்ணெய் நிறுவனங் கள் கிரெம்ளினின் "போர் இயந்திரத்திற்கு" நிதி யளிப்பதாகவும் அவர் கூறினார். "கொலைகளை நிறுத்தும் வகையில் உடனடி போர் நிறுத்தத் திற்கான நேரம் இது" என்றும் பெசென்ட் தெரி வித்துள்ளார்.

இதேவேளை, இந்தத் தடைகள் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்த உதவும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார். (நி)

# பெற்றோலுடன் சென்ற போது வெடித்துச் சிதறிய வாகனம்!

- 39 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு
- 60 பேர் படுகாயம்
- நைஜீரியாவில் சோகம்



(நைஜர்)

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்நாட்டின் லகோஸ் மாகாணத்தில் இருந்து நைஜர் மாகாணத்திற்கு டேங்கர் லொறியில் பெற்றோல் கொண்டு செல்லப்பட் டது.

நைஜர் மாகாணத்தின் கட்சா பகுதியில் உள்ள சாலையில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக சாரதி யின் கட்டுப்பாட்டை இழந்த லொறி சாலையில் கவிழ்ந்து விபத்தில் சிக்கி யது.

இதனால் டேங்கர் லொறியில் இருந்த பெற் றோல் கசிந்து வெளி யேறியது. அப்போது ஏற் பட்ட தீ விபத்தில் டேங்கர் லொறி வெடித்துச் சிதறி யது.

இந்தச் சம்பவத்தில் வீதி யோரம் நின்றுகொண்டி ருந்தவர்கள், வாகனங் களில் பயணித்தவர்கள் என 39 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

60 பேர் படுகாய மடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயம் அடைந்த வர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனை யில் சிகிச்சைக்கு அனு மதித்தனர். இந்த விபத்து குறித்து பொலிஸார் விசா ரணை நடத்தி வருகின்ற னர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலை காரணமாக ஆறுகளின் நீர்மட்டம் உயர்வு

(கொழும்பு)

பலத்த மழை காரணமாக களு, நில்வளா, களனி உள்ளிட்ட சில ஆறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு குறித்த ஆறுகளின் இருமருங்கிலும் வசிக்கும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பலத்த மழையின் காரணமாக இராஜாங்கனை, கலாவெவ, தப்போவ மற்றும் தெதுரு ஓயா உள்ளிட்ட 15 நீர்த்தேக்கங்கள் வான் பாய்வதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா இன்று

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், கிளிநொச்சி மாவட்ட செயலக மற்றும் மாவட்ட பண்பாட்டு பேரவை இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான எஸ்.முரளிதரன் தலைமையில், இரணைமடு நெலும் பியச (தாமரைத் தடாகம்) மண்டபத்தில் காலை 9 மணிக்கு குறித்த விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் தர்சினி நிதர்ஷன் மற்றும் கிளிநொச்சி முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர் கந்தசாமி முருகவேல், கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர் "கலைக்கிளி" வேலுப்பிள்ளை சௌந்தரராசா, பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர் "கலாபூஷணம்" சண்முகம் இரத்தினேஸ்வரன், கண்டாவளை பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர் "கலைக்கிளி" மயில்வாகனம் வேலாயுதபிள்ளை, பச்சிலைப்பள்ளி பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர் "கலாபூஷணம்" கந்தையா ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் போது கனகாம்பிகை அம்மன் ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, இரணைமடுச் சந்தியிலிருந்து விழா மண்டபம் வரை பண்பாட்டு ஊர்வலத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கலாசார பேரவையினர் மற்றும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், சான்றிதழ் மற்றும் பரிசில் வழங்கல் நிகழ்வுகளுடன் கலைக்கிளி மற்றும் இளங்கலைஞர் விருது வழங்கிக் கலைஞர் கௌரவிப்பு, மாவட்ட இணையத்தள அறிமுகம் முதலான பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (8)

# பாடசாலைகளை மூடுவது அரசாங்கத்தின் நோக்கமல்ல

## தெளிவுபடுத்திய பிரதமர்

(கொழும்பு)

ஒரு பாடசாலையும் மூடப்படாது என்றும், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை பாடசாலைகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துவதாகும் என்று கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கல்வி சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற துணைக்குழுவின் கூட்டத்தில் பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கல்வி முறையின் தரத்தை மேம்படுத்துவதையும் அனைவருக்கும் சம வாய்ப்புகளை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 2026 ஆம் ஆண்டு முதல் நாடு தழுவிய அளவில் அனைத்து பாலர் பாடசாலைகளுக்கும் ஒரே பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளைப் பருவ பாடத்திட்ட கட்டமைப்பு ஏற்கனவே இறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், சுமார் 19,000 பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் அதிகாரிகளுக்கான பயிற்சித் திட்டம் நவம்பர் 25 ஆம் திகதி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்துடன் இணைக்கப்பட்ட கற்பித்தல் நடைமுறைகளை செயற்படுத்துவதற்கு உதவும் வகையில், ஒவ்வொரு மாகாணத்திலும் பயிற்சி அமர்வுகள் நடத்தப்படும் எனவும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய தானியங்கி சோதனை இயந்திரங்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 20 புதிய தானியங்கி சோதனை இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இது சோதனை செயல்முறையை நெறிப்படுத்தவும், உச்ச பயண நேரங்களில் நெரிசலைக் குறைக்கவும் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பயணிகளுக்கு மென்மையான அனுபவத்தை வழங்கவும், செயல்திறனை மேம்படுத்தவும் புதிய தானியங்கி சோதனை இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான நிலைய தரை கையாளுதல் பிரிவுத் தலைவர் தீபால் பல்லேகங்கொட தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஆரம்பத்தில் 8 தானியங்கி சோதனை இயந்திரங்கள் நிறுவப்பட்டதாகக் கூறிய அவர், இப்போது மேலும் 20 இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும், இதனால் விமான நிலையத்தில் மொத்தம் 28 தானியங்கி சோதனை இயந்திரங்கள் இருப்பதாகவும் கூறினார்.

# இன்று ஒரு தகவல் 467



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நடப்பது நடக்கட்டும்!

ஒரு ஊரிலே ஒருவன் இருந்தான்.

சாதாரண ஆள்தான். குதிரை வண்டி ஓட்டிக்கொண்டிருந்தான். எலும்பும் தோலுமாக ஒரு குதிரை. ஓட்டையும் உடைசலுமாக ஒரு வண்டி. இதுதான் அவன் சொத்து, இதை வைத்தே அவன் காலம் தள்ளிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அவன் அந்த வண்டியிலே எங்கேயோ போய்விட்டுத் திரும்பி வந்துக் கொண்டிருந்தான். அப்போது அந்த குதிரை ஒரு இடத்திலே கால் தடுமாறி கீழே விழுந்துவிட்டது. கால் முறிந்து போனது.

ஊரிலே உள்ளவர்கள் எல்லாம் அவனைப் பார்த்து இரக்கப்பட்டார்கள். "ஐயோ பாவம். இப்படி ஆகிவிட்டுதே. இனிமேல் எப்படித்தான் பிழைப்பு நடத்தப் போகிறாயோ" என்று சொல்லி பரிதாபப்பட்டார்கள்.

ஆனால் இவனோ கொஞ்சம் கூட பதற்றப்படவில்லை நடப்பது நடக்கட்டும் என்று சொல்லிவிட்டு அவன் பாட்டுக்குப் போய்விட்டான்.

கிராமத்து ஜனங்களுக்கு ரொம்ப ஆச்சரியம். இவனுடைய அமைதி நிதானம், அலட்டிக்காத தன்மை இதுதான் அவர்கள் ஆச்சரியத்துக்குக் காரணம்.

அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? காட்டுக்குப் போய் புதிதாக ஒரு குதிரையைப் பிடித்துக் கொண்டு வந்து அவனிடம் பரிசாக கொடுத்துவிட்டார்கள். இதை சிலபேர் பார்த்தார்கள் அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? நீ கொடுத்து வைத்தவன் மோசமான குதிரைக்குப் பதிலாக நல்ல குதிரையே உனக்குக் கிடைத்துவிட்டதே!" என்றார்கள். இப்போதும் அவன் அலட்டிக்கவில்லை.

"நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம்!" என்று சொல்லிவிட்டுப் பேசாமல் போய்விட்டான். கொஞ்ச நாளில் என்ன நடந்தது தெரியுமா? காட்டிலேயிருந்து பிடித்துக்கொண்டு வந்த குதிரை ஒருநாள் காட்டுக்கே ஓடிப்போனது. "ஐயோ பாவம் நாம் கொடுத்த குதிரையும் அவனை விட்டுவிட்டுப் போய்விட்டதே!" என்று பரிதாபப்பட்டார்கள். இப்பவும் அந்த ஆள் பொறுமையாக நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம்! என்னு சொல்லிவிட்டான். மறுபடியும் கொஞ்சநாள் ஆனது. ஓடிப்போன குதிரை இன்னும் ஒரு ஐந்தாறு குதிரைகளையும் சேர்த்துக்கொண்டுத் திரும்பி வந்தது. உடனே ஊர் ஜனங்கள் பார்த்தார்கள். "நீ கொடுத்து வைத்தவன் அஞ்சாறு குதிரை சேர்ந்து கிடைத்துவிட்டதே உனக்கு!" என்றார்கள். இப்பவும் அந்த ஆள் பதட்டப்படவில்லை. வழக்கமாக சொல்வது மாதிரியே சொன்னான்.

அதன்பின் ஒருநாள். அந்த வண்டிக்காரனின் ஒரே மகன் அந்த அஞ்சாறு குதிரைகளையும் நல்லா கவனித்துக்கொண்டிருந்தான். வண்டியிலே பூட்டுவதற்குப் பழக்கிக்கொண்டிருந்தப்போது ஒரு முரட்டுக்குதிரை கொடுத்த உதையிலே அவன் கால்முறிந்து போனது.

"ஐயோ உன் பிள்ளைக்கு இப்படி ஆகிவிட்டுதே! என்று ஊர் ஜனங்கள் பரிதாபப்பட்டார்கள். "நடப்பது நடக்கட்டும்" என்று சொல்லிவிட்டு இவன் மகனை கவனித்துக்கொண்டிருந்தான்.

அதுக்கப்புறம் திடீர் என்று ஒருநாள் அந்த தேசத்திலே போர். அடுத்த தேசத்திலேயிருந்து படையெடுத்துககொண்டு வந்து விட்டார்கள்! "வீட்டுக்கு ஒரு ஆள் வர வேண்டும் சண்டை போடுவதற்கு" என்று ராஜா உத்தரவு போட்டார். வண்டிக்காரன் பிள்ளைக்கு கால் ஒடிந்ததாலே சண்டைக்கு போக வேண்டிய அவசியமில்லாமல் போனது அவனுக்கும் வயதானதினாலே போக வேண்டிய கட்டாயமில்லை!

இப்பவும் அவனைப் பார்த்து நீ ரொம்பவும் கொடுத்துவச்சவன்! என்றார்களாம். இவனும் வழக்கம்போலவே "நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம்" என்னு சொல்லிக்கொண்டே அவன் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தானாம். இது ஒரு கதை வீட்டிலே தாத்தாக்கள் பாட்டிகள் சொல்கிற கதை. கதை ஒரு மாதிரியாக தெரிந்தாலும் இதிலிருந்து நாம் தெரிஞ்சிக்க வேண்டிய ஒரு விடயம், தத்துவம் சொன்னால் - வாழ்க்கையிலே சுக துக்கங்களை நாம் சமமாக பார்க்கப் பழகிக்க வேண்டும் என்பதுதான்.

"நடப்பது நடக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டு நாம் பாட்டுக்கு பேசாமல் படுத்துத் தூங்கலாம் என்று விளங்கிக்கொள்ளக் கூடாது. ஒரு குதிரை பந்தயம் நடந்துகொண்டிருந்தது. ஒருவன் ஒரு குதிரை மேலே பணம் கட்டினான். அது ஜெயிக்கவில்லை! பக்கத்திலே இருக்கறவர் சொன்னாராம். நீ பணம் கட்டினியே அந்த குதிரை ஓடவே இல்லை. அது பாட்டுக்கு நடந்து போகிறது பார்! என்றாராம். அதற்கு இவன் "நடப்பது நடக்கட்டும்!" என்றானாம்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமூக பாதுகாப்பு தேசிய விருது வழங்கும் நிகழ்வு

(தருமபுரம்)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய விருது வழங்கும் நிகழ்வானது வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி திருகோண மலை மாவட்டத்தில் JKAB HOTEL இல் கடந்த 16 ஆம் திகதி இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் தலைமை யில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மாவட்ட அடைவு மட்டத்தினை பெற்றுக்கொண் டமைக்காக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.முரளிதரன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ந.இன்பராஜ் ஆகியோ ருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக் கப்பட்டன.

அத்துடன் கரைச்சிப் பிரதேச செயலகம் 2024 ஆம் ஆண்டு தேசிய இலக்கினை அடைந்து தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டமைக்கு கரைச்சிப் பிரதேச செயலா ளர் த.முகுந்தன் அவர்க ளுக்கும் சமூக சேவை உத்தியோகத்தர் ந.கீதரோ கினி, சமூக பாதுகாப்பு விட யப்பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.ஜசி ந்தா, பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தர் ப.நிரஞ்சலா ஆகியோரு க்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.



மேலும் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலக இணைப்பதிகாரி ட.கம்சனா மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ம.மகிபரன் ஆகியோரும் கலந்து கொண்டு விருது களை பெற்றுக் கொண்டனர். (8-316)

# சொல்வன்மை

சொல்வன்மை என்பது ஒருவருடைய பேச்சாற்றலா கும். இதனை "நா நலம் என் றும் கூறுவர். ஒருவருடைய பேச்சாற்றலுக்கு நா உறுது ணையாக இருப்பது. பேச்சு என்பது ஒருவர் தன்னுடைய கருத்தைப் பொருள் பொதிந்த சொற்களால் எடுத்துக் கூறு வதாகும். ஒருவருடைய சொல் வன்மை பிறரோடு உரை யாடுவதற்கு மிகவும் இன்றியமையாதது. அதுவே அவருக்கு நன்மையையும் தீமையையும் தர வல்லது. தொடர்பாடல் நிலைக்கு உரையாடல் வேண்டும். ஆனால் பேச்சுவன்மையால் உரையாடல் சிறப்பாக நடை பெறும்.

இன்னும் ஒருவர் தன் னுடைய கருத்தைப் பலர் முன் னிலையில் எடுத்துரைக்கும் போது சொல்வன்மை பெரிதும் துணை செய்யும். அவர் அவ்வாறு எடுத்துரைக்கும் போது அது கேட்போரைப் பெரிதும் ஈர்ப்பதாக அமைய வேண்டும். அவர் பேசும் போது அக்கருத்தைக் கேட்க விரும்பா தவரும் விரும்பி வந்து கேட்கவேண்டும். அதற்குரிய சொற்களைத் தெரிந்து பேச வேண்டும். பொருளைத் தெளி வாக விளங்கக் கூடிய சொற் களையே பயன்படுத்த வேண் டும். ஒரு சொல்லைப் பயன் படுத்தும் போது அச்சொல்லை வெல்லப் பிறிதொரு சொல் லைப்பயன்படுத்த முடியாதவாறு சொல்லவேண்டும்.

இன்று தாம் கற்றவற்றைப் பிறருக்கு விளக்கமாக எடுத்துக் கூறவல்ல சொல்வன்மையற் றவர் பலர் உளர். இத்தகை யவர்களை நறுமணமற்ற மலர் களுக்கு உவமையாக வள்ளு வர் கூறியுள்ளார். கண்ணுக்கு அழகான தோற்றம் உடைய வராக இருப்பது மட்டும் போதாது. தன்னுடைய கருத்தை விளக்க மான சொற்களிலே எடுத்துக் கூறக்கூடிய சொல்வன்மை தேவை. சொல்வன்மை பெற்றவர் சோர்வடைய மாட் டார்கள். அதனால் சொல் வன்மையுடையவர்களை சொல்லாடலில் எவருமே வெல்லமுடியாது.

சொற்களைத் தெரிந்தெடு த்துப் பயன்படுத்தும் ஆற்றல். பெற்றவரே எடுத்துரைப்புச் செய் யும் ஆற்றலுடையவராவார். சொல் இரு வகையானது. ஒன்று இன்சொல். மற்றது வன் சொல் எனப்படும் நற்சொல், தீய சொல் என்றும் சொல் வகைப்படுத்தப் பட்டுள்ளது. நற்சொல்லைப் பயன்படுத்தினால் ஆக்கம் நிக ழும். தீய சொற்பயன்பாட்டால் கேடுவிளையும். சொல்லுதல் என்பது சொற்களைப் பயன் படுத்தித் தமது கருத்தை விளக்குவது. சொல்லுதல் யார்க் கும் எளிதென்பர். அது உண் மையன்று.

ஒருவருக்கு ஒரு கருத்தைச் சொல்லும் போது அந்தக் கருத் தைத்தெளிவாகப் புலப்படுத்தக் கூடிய சொற்களைத் தெளிவாகத் தெரிவு செய்ய வேண்டும். சொற்களைப் பயன்படுத்தும் போது பல்வேறு வகையான நிலையிலே பயன்படுத்தலாம். சொல்லுதல், பேசுதல், உரைத் தல், இயம்புதல், விளம்புதல், புகல்தல், பகர்தல், ஏசுதல், மொழிதல், கூறுதல், புகழ்தல், இகழ்தல், ஏத்துதல், போற்றுதல், திட்டுதல், தூற் றுதல், பழித்தல், நயத்தல், நவில்தல், நுவல்தல் என அவை அமையும். இவை அனைத்திற்கும் சொல்வன்மை இன்றியமையாதது. இவற்றுள் சொல்லுதல் மட்டுமே சொல் லோடு இணைந்த செயற்பாடாக உள்ளது.

ஏனையவை யாவும் சொற்களைப் பயன்படுத்தும் வேறுபட்ட நிலைகளை வெளிப் படுத்துவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக "ஏத்துதல்" என்பது ஒருவரை உயர்த்திச் சொல்லுவதற்காக ஏற்ற சொற் களைப் பயன்படுத்துவதாகும்.

தமிழ்ச் சொற்களின் கட் டமைப்புச் சொல்வன்மைக்குச் சிறப்புத்தருவது. சில சொற் களைப் பிரித்துப் பயன்படுத்தும் போது நகைச் சுவையை அவை தரும்.


பேச்சு வன்மையைப் புலப்படுத்தப் பலர் சொற்களைப் பிரித்துப்பயன்படுத்துவர். எடுத் துக்காட்டாகத் திருக்குறளில் உள்ள அதிகாரங்களில் பெயர் கள் பல மை ஈறு கொண்ட மைந்துள்ளன. அவற்றுட் சில வருமாறு; வெஃகாமை, அழுக் காறாமை, புறங் கூறாமை, பய னில் சொல்லாமை, கள்ளாமை, வெகுளாமை, இன்னா செய் யாமை, நிலையாமை, கல் லாமை. கொல்லாமை என்னும் பெயர்களில் "ஆமை" என சொற் பிரிப்புச் செய்து நகைச்சுவையாக அவற்றை ஆமை யென்னும் விலங்கின் பெயர்களாக தெளி வாக விளக்கிக் கூறுவர்.

சொல்வன்மையைப் பயன் படுத்தப் பல அரங்குகளும் இப் போது நடைபெறுகின்றன. சொல்லாடு களம், சுழலும் சொற் போர், சொற்சிலம்பம், சொல்லா ட்டம் என்பவை இவற்றுட் குறிப்பிடத்தக்கவை. சொல் வன்மை பெற்றவருக்கு சொல்லருவி, சொல்லின் செல்வர், செஞ்சொற் செல்வர், அருள்மொழியரசி போன்ற சிறப்புப் பெயர்களும் வழங் கப்பட்டுள்ளன.

எனவே சொல்வன்மை என்பது மொழியாற்றல், மொழித்திறன் என்பவற்றை எடுத்துக்காட்டும் செயற்பா டாகும். மொழியான் தொடர் பாடலுக்கும் சொல்வன்மையே உறுதுணையானது.

தமிழ் மொழியின் இனி மையையும் சுவையையும் புலப்படுத்தச் சொல்வன்மை வேண்டும். செந்தமிழும் நாப் பழக்கம்" என்ற முதுமொழி தோன்றச் சொல்வன்மையே துணை செய்தது.

வெள்ளி நற்சிந்தனை 10



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

24.10.2025
ஐப்பசி 07, வெள்ளிக்கிழமை
திருதியை முன்னிரவு 11.42 மணி

அனுசம் முழுவதும்
சுப நேரம் 6.02 -7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

சுப முகூர்த்த நாள்.
சந்திராஷ்டமம்-பரணி

வளவன்

**மேஷம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மன திற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுப நிகழ்வு களில் கலந்து மகிழும் வாய்ப் புண்டு.

**துலாம்:** உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள் வீர்கள்.

**மகரம்:** பணத்தேவைகள் எளி தில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க் கையில் இன்பங்கள் கூடும் நாள், திட்டமிட்ட காரி யங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்:** வெளியூர்த் தொடர்பு கள் அனுகூலம் தரும், அடுத்தவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக் களைக் காணும் நாள், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வழிபாடு குதூகலம் தரும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார், விரும்பிய காரியம் விரும்பி யபடியே வந்து சேரலாம்.

**கும்பம்:** நல்லவர்களின் அறி வுரையும் ஆதரவும் கிடைக்கும், எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்:** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், வீட் டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந் தப்படுத்தும்.

**கன்னி:** கொடுக்கல் வாங் கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உத வியை நாடுவீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப் பங்கள் அகலும், உற்சாகத்தோடு செயற்படும் நாள்.

**தனுசு:** பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், பயணத்தால் பலனுண்டு.

**மீனம்:** தடைப்பட்ட காரியங் களில் முன்னேற்றம் காணும் நாள், அன் பால் சாதித்துக் காட் டும் நாள், எதிர்பார்ப் புக்கள் நிறைவேறும் வாய்ப் புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மனிதன் புகழ் பெறும்போது அவன் செய்த தவறுகளும் புகழ்பெறத் தொடங்கும்.


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர்

892





மனித சஞ்சாரம் அற்றதாகத் தோன்றிய அந்த மேன்மாடக்கூடங்களில் மந்தாகினி சுற்றிச்சுற்றி அலைந்தாள். மாடத்தின் உட்புறத்து ஒரங்களுக்குப் போக அவள் மிகவும் தயங்கினாள். ஓரிடத்தில் உட்புறத்தில் கீழேயிருந்து தீப வெளிச்சம் வருவதைக் கண்டு அங்கே போய்த் தூண் மறைவில் எட்டிப் பார்த்தாள். ஆகா! அவள் பார்த்தது என்ன? பார்த்த கண்களைத் திருப்பவே முடியாத காட்சிகளைப் பார்த்தாள்.

ஒரு விசாலமான மண்டபத்தின் மத்தியில் சித்திர வேலைப்பாடு அமைந்த சப்ரமஞ்சக் கட்டிலில் ஒருவர் சாய்ந்த வண்ணம் படுத்திருந்தார். அவரைச் சுற்றிலும் நாலு ஸ்திரீகளும் இரண்டு ஆடவர்களும் அச்சமயம் நின்றார்கள். படுத்திருந்தவரிடம் அவர்கள் பயபக்தி கொண்டவர்கள் என்பது அவர்களுடைய தோற்றத்திலிருந்து தெரிந்தது. சிறிது தூரத்தில் இன்னும் அதிக மரியாதையுடன் இரு தாதிப் பெண்கள் நின்றார்கள்.

ஒரே ஒரு தீபந்தான் அந்த மண்டபத்தில் எரிந்தது. அதுவும் கட்டிலுக்கு அருகில் இருந்த விளக்குத் தண்டின் மீது பொருத்தப்பட்டு மங்கலான வெளிச்சத்தையே தந்து கொண்டிருந்தது. சுற்றிலும் நின்றவர்களை முதலில் மந்தாகினி பார்த்தாள். அவர்களில் ஒருத்தி தன் உயிருக்குயிரான சகோதரன் மகள் பூங்குழலி என்பதை அறிந்தாள். மற்றவர்களையும் அவள் முன்னம் சில தடவை மறைவான இடங்களிலிருந்து பார்த்திருக்கிறாள். ஆனால், அவர்கள் எல்லாம் யார் யார் என்பது அவ்வளவு நன்றாய்த் தெரியாது.

சுற்றி நின்றவர்களைப் பார்த்துவிட்டு மிக மிகத் தயக்கத்துடன் மந்தாகினி கட்டிலில் படுத்திருந்தவரைப் பார்த்தாள். அவளுடைய நெஞ்சு ஒரு கணம் ஸ்தம்பித்துவிட்டது. ஆம் அவரேதான்! எத்தனையோ யுகம் என்று சொல்லக்கூடிய நீண்ட காலத்துக்கு முன்னால் தான் சின்னஞ்சிறு பெண்ணாக ஓடி விளையாடிக் காடுகளில் திரிந்து கொண்டிருந்த காலத்தில் ஒரிடத்தில் வந்து ஒதுங்கி, தன் உள்ளத்தையும் உயிரையும் கொள்ளை கொண்ட மனிதர்தான்.


தான் வாழ்ந்திருந்த பூதத் தீவைச் சில காலம் சொர்க்க லோகமாக ஆக்கியிருந்தவர் தான். பெரிய கப்பலில் கூட்டமாக வந்தவர்களால் அழைத்துப் போகப்பட்டவர் தான்! ஆகா! அவர் இப்போது எப்படி மாறிப் போயிருக்கிறார்!

பூர்வ ஜன்மம் என்று சொல்லக்கூடிய அந்த நாட்களுக்குப் பிறகும் மந்தாகினி அவரைப் பல தடவை அவரறியாமல் பார்த்திருக்கிறாள். காவேரி நதியில் உல்லாசப் படகுகளில் அவர் சென்ற போது கரையில் அடர்ந்த புதர்களின் மறைவில் ஒளிந்திருந்து பார்த்திருக்கிறாள். நகரங்களின் தெருக்களில் வெண்புரவிகள் பூட்டிய தங்க ரதத்தில் வீதிவலம் வந்தபோது கூட்டத்தோடு கூட்டமாய் நின்று பார்த்திருக்கிறாள். ஆனால் கடைசியாக அவரைப் பார்த்துக் கொஞ்ச காலம் ஆகிவிட்டது. அந்தக் காலத்திற்குள்ளே தான் இப்படி மாறிப் போயிருக்கிறார். முகத்தில் தாடியும் மீசையும் வளர்ந்திருந்தன. கன்னங்கள் ஒட்டி உலர்ந்து போயிருந்தன. நெற்றியிலே சுருக்கங்கள். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தக தக தங்கக் குதிரைகள்



இராமநாதன் காந்தார நாட்டில் கற்சிலை அரசரிடம் விடைபெற்று பட்டு தேசத்தை நோக்கித் தன் தேரில் விரைந்தார். கற்சிலை மன்னரிடம் பேசிய போது அவர், மந்திரவாதி பல முறை தன்முன்னால் தோன்றியபோது தன்னை மதிக்காத பட்டு தேசத்தையும் தான் பழி வாங்கியதாகச் சொன்னதாக இராமநாதன் தெரிந்து கொண்டார், ஆக பட்டுதேசம் சென்றால் மந்திரவாதி பற்றிய தகவல்கள் கட்டாயம் கிடைக்கும், மந்திரவாதியை வென்று காந்தார நாட்டிற்கு உதவ வேண்டும் என்று நினைத்தார்.பட்டு தேசத்தைப் பற்றி ஏற்கனவே இராமநாதன் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறார்.

குருகுலத்திலும் ஆசிரியர்கள் சொல்ல கேட்டிருக்கிறார். சின்ன வயதிலேயே பட்டு தேசத்தின் மீது தனி பாசமுண்டு. பட்டு தேசம் உலக வரலாற்றிலும் மக்கள் நாகரிகத்தில் தனியிடம் பெற்று விளங்கியது. மக்கள் அனைவரும் சுறுசுறுப்பானவர்கள், பட்டு, தேயிலை, கண்ணாடி, கந்தகப்பொடி, காகிதம் போன்றவற்றை உலக நாடுகளுக்கு அவர்கள் தான் எப்படி உபயோகிப்பது என்பதை கற்று கொடுத்தவர்கள்.

வீரத்திலும் தீரத்திலும் சிறந்து விளங்கிய வீரர்கள். அவர்களின் தனிச்சிறப்பு ஏதாவது ஒரு பொருளை பார்த்தாலோ அல்லது கேள்விப்பட்டாலோ உடனே அதை போன்றே உடனே தயாரிக்கும் தன்மை கொண்டவர்கள். இராமநாதர் காந்தார நாட்டின் எல்லையை மாலையில் அடைந்த போது வானம் கருமையாக இருண்டு, இடி மின்னலுடன் கடுமையான மழை பெய்தது, அவரும் ஒரு மலையடிவாரத்தில் தங்கிவிட்டார்.

மறுநாள் காலையில் தன்னுடைய தேரில் ஏறிபட்டு தேசத்தின் எல்லையை அடைந்தார். எங்கே பார்த்தாலும் பச்சை பசேல் என்ற மரங்களும் செடிகளும் புற்களும் நிறைந்திருந்தது, அழகிய பறவைகளும், வனவிலங்குகளையும் ரசித்தார்.

அங்கே கிடைத்த நல்ல பழங்களையும், காய்கறிகளையும், அம்மா கொடுத்த தனக்கு பிடித்தமான உணவையும் இடையிடையே சாப்பிட்டார். அவ்வாறாக இரண்டு நாட்கள் தொடர் பயணத்தின் பின்னர் மாலை நேரத்தில் அவரது பயணம் மொத்தமாக தடைப்பட்டது, காரணம் பட்டு தேசத்தின் மிகப் பெரிய ஆறான மஞ்சள் ஆறு தான். சில நாட்களாக கடுமையாக பெய்த மழையினால் காட்டு வெள்ளத்தால் மஞ்சள் ஆறு கடுமையான வேகத்தில் பாய்ந்து சென்றது.

சாதாரண காலத்தில் மஞ்சள் ஆற்றை கடக்க கட்டாயம் வலிமைமிக்க படகு தேவை, இந்நிலையில் படகில் கூட பயணம் செய்யமுடியாது. தன்னுடைய தேரை உபயோகித்து ஆற்றை கடக்க முடியாத இக்கட்டான நிலைக்குள்ளானார்.

சூரியன் மறையும் நேரம் சீக்கிரத்தில் வரும் நிலையில் என்ன செய்வது என்று அறியாமல் விழித்தார், அவர் இருந்த பகுதியில் மக்கள் யாரும் வசிக்கவில்லை, சுற்றும் முற்றும் தன் தேரில் ஏறி பார்த்தார். ஒன்றுமே புலப்படவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இல்லாவிட்டாலும் நாளை உங்கள் கடமையை நீங்கள் செய்தே தீரவேண்டும் அதில் இருந்து தப்பிக்க முடியாது. – ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நெல் விதைப்பதை விடுத்து நாற்று நடுகையை அறிமுகப்படுத்துங்கள்

எங்கள் நாட்டில் பெரும்போக நெற்செய்கை என்பது தோல்வியடைந்து வருவதைக் கடந்த பல வருடங்களாகக் காணமுடிகிறது.

இதற்கு பெரும் போகம் என்பது, மழையை நம்பிய செய்கையாக இருப்பதே காரணமாகும்.

பொதுவில் இயற்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் மழைவீழ்ச்சியிலும் மாற்றங்களை ஏற்படுத்திவிட்டன.

முன்பெல்லாம் காலபோகம் தொடங்கி விட்டால், மழை சீராகப் பெய்து கொடுக்கும்.

அதாவது மழைவீழ்ச்சி என்பது ஆரோகண வரிசையில் சென்று, பின்னர் அறுவடை காலத்தில் அவரோகணத்திற்கு வந்துவிடும்.

ஆனால் சமகாலத்தில்; ஒன்றில் மழை பெய்வதில் தாமதம் ஏற்படுகிறது. அல்லது மழை பெய்தால் விதைத்த நெல் முளைப்பதற்கு முன்னமே வயல்களில் வெள்ளம் வந்துவிடுகிறது. இதனால் நெல் விதைப்பிலேயே பயிர்ச் செய்கை தோல்வியடைகிறது.

உண்மையில் சமகாலத்தில் மழைவீழ்ச்சிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அல்லது சீரற்ற தன்மைகள் காரணமாக பெரும்போக நெற்செய்கை தோல்வியடைந்து விடுகிறது.

இங்குதான் பெரும்போக நெற்செய்கையில்; நெல் விதைப்பு என்ற மரபுவழி நடைமுறையை மாற்றி, நெல் நாற்றுநடுதல் என்ற முறையை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இந்தியாவில் நெற்செய்கை என்பது மிகவும் உச்சம் பெற்றுள்ளதைப் புள்ளி விபரங்கள் உறுதிசெய்கின்றன.

இவ்வாறு அங்கு நெற்செய்கை வெற்றி அளிப்பதற்குக் காரணம் அங்கு நெற்செய்கை என்பது நாற்று நடுகை மூலம் இடம்பெறுவதாகும்.

அதிலும் ஒருகாலத்தில் நாற்று நடுகையில் மனிதவளம் ஈடுபடுத்தப்பட்டு வந்ததாயினும் தற்போது அங்கு இயந்திரங்கள் மூலம் நாற்று நடுகை இடம்பெற்று வருவதைக் காணமுடியும்.

ஆக, இந்தியாவில் நாற்றுநடுகை மூலம், சீரற்ற காலநிலையில் இருந்து நெற்பயிர்ச் செய்கை பாதுகாக்கப்படுகின்றன.

எனவே, நாமும் காலபோகச் செய்கையிலேனும் நெல் நாற்றை நடுகை செய்யும் முறையை அறிமுகம் செய்ய வேண்டும். அவ்வாறு அறிமுகம் செய்வதன் மூலம் எங்கள் வேளாண் செய் விவசாயிகள் நெற்செய்கையில் இலாப மீட்கக்கூடிய சூழலை உருவாக்க முடியும்.

இது தவிர, நெல்லை விதைப்பதனால் மொத்த வயல் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி நெல் முளைக்காத பகுதியாக இருக்கின்ற மிகமோசமான நிலைமை உள்ளது. இதை மாற்றியமைப்பதற்கு நெல் நாற்று நடுகை முறைமையே ஒரே வழியாகும்.

ஆகவே இது தொடர்பில் கமத்தொழில் அமைப்புகள் கூடிய கரிசனை எடுத்து, 2026 ஆம் ஆண்டிலேனும் நாற்றுநடுகை செய்கின்ற முறையை நெற்செய்கையில் அறிமுகப் படுத்த வேண்டும்.

ஆம், மாற்றங்கள் பற்றிச் சிந்திக்கும் போது தான் வாழ்க்கையில் முன்னேற்றங்களும் ஏற்படுகின்றன.

# சமூகத்தை அழிக்கும் போதை மாபியாக்களின் அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் அடிபணியோம்

## ஆளுநர் வேதநாயகன் சூளுரை

(யாழ்ப்பாணம்)

குறுகிய காலத்துக்குள் செல்வந்தராக வேண்டும் என்பதற்காக உயிர்கொல்லி போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுவோர் சமூகம் தொடர்பில் சிந்திப்பதில்லை. அதேநேரம் உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்களையும் அச்சுறுத்தியிருக்கின்றனர்.

இந்த அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து சமூகம் எப்படியாவது போகட்டும் என்று ஒதுங்கியிருக்க முடியாது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று (23) நடைபெற்ற அருட்கலாநிதி டேவிட் வின்சன் பற்றிக் அவர்கள் எழுதிய "விடியல்" நூல்வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய ஆளுநர்,

தான் யாழ் மாவட்டச் செயலாளராக செயற்பட்ட காலத்தில் போதைப் பொருள் ஒழிப்புக்காக அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அவர்கள் யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பித்த அனுபவத்தை நினைவு கூர்ந்தார்.

அத்துடன் மறுவாழ்வு செயற்பாட்டை அவர் தீவிரமாக முன்னெடுத்திருந்த காலத்தில் ஓர் நாள் அவர் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டதையும் அவர் நடத்திய புனர்வாழ்வு நிலையத்தின் மீதும் இரவு வேளைகளில் கல்வீச்சு நடத்தப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

உயிர்கொல்லி போதைப்பொருள் விற்பனை தொடர்பான தகவல்களை நீங்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு வழங்க வேண்டாம். நேரடியாக எனக்கு வழங்குங்கள் என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், அன்றைய நாளில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு முன்னால் குறிப்பிட்டமையிலிருந்து போதைப்பொருள் விற்பனை வலைப்பின்னலின் ஆழத்தை விளங்கிக் கொள்ளலாம் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இவற்றுக்குப் பயந்தால் சமூகத்தைக் காப்பாற்ற முடியாது எனக் குறிப்பிட்ட அவர், அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அவர்களின் முயற்சிக்கு அனைவரும் ஆதரவாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (ம-7)

# வடக்கில் போதைப்பொருளைப் பரப்புவதில் இராணுவத்தினருக்கு பெரும் பங்குண்டு

## கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கில் போதைப் பொருளைப் பரப்புவதில் இராணுவத்தினருக்குப் பெரும் பங்கு உள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் கடும் குற்றச்சாட்டை முன் வைத்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர்,

மக்கள்மீது உண்மையான பற்றுக்கொண்ட அரசாங்கத்தினால் மாத்திரமே போதைப்பொருளை முற்றுமுழுதாக ஒழிக்க முடியும் என்றும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுப்பதாயின் போதை ஒழிப்புச் செயற்பாட்டிலிருந்து இராணுவத்தை முற்றுமுழுதாக நீக்க வேண்டும்.

போர் மௌனிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரே வடக்கில்பாரியளவில் போதைப்பொருள் பரவத் தொடங்கியதாகக் குறிப்பிட்ட அவர், இன்று சில பகுதிகளில் சமூக விரோதிகளுக்கு அடைக்கலம் தரும் இடமாக இராணுவ முகாம் மாறியுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போதைப்பொருள் பாவனை பூச்சியமாக இருந்ததையும் விடுதலைப்புலிகளின் புரட்சியைத் தோற்கடிக்கப் பயன்படுத்தப்பட்ட போதைப்பொருள் என்ற "புற்றுநோய்" இன்று தெற்கு வரை பரவியுள்ளது.

போதைப்பொருள் பரவலில் இராணுவத்துக்கு உள்ள தொடர்பு குறித்து தேடிப்பார்க்க வேண்டும். பொலிஸ்துறை, கல்வி, சுகாதாரம் போன்ற சமூகத்துக்குத் தேவையான விடயங்களை அந்தந்த மக்களிடமே விடவேண்டும். மாறாக, வடக்கு கிழக்குடன் எவ்வித தொடர்பல்லாத தரப்பினரால் அங்குள்ள பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்கமுடியாது. கடந்த காலங்களில் இத்தகைய தரப்பினரின் செயற்பாட்டாலேயே வட மாகாணம் திட்டமிட்ட வகையில் கல்வி உள்ளிட்ட விடயங்களில் பின்தள்ளப்பட்டது என்றார். (ம-7)

# பெக்கோ சமன் கைபேசியில் 'நாமல் சேர்', 'ராஜபக்ஷ சேர்'

## பிரதியமைச்சர் ஜயசிங்க பகிரங்கம்

(கொழும்பு)

திட்டமிட்ட குற்றக் குழு உறுப்பினர் பெக்கோ சமனின் கைபேசியில் "நாமல் சேர்" மற்றும் "எனது சேர் ராஜபக்ஷ (மகே சேர் ராஜபக்ஷ)" ஆகிய பெயர்களில் தொலைபேசி இலக்கங்கள் பதிவாகியுள்ளன எனப் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

குறித்த தொலைபேசியில் குறிப்பிடப்பட்டுள்ள நாமலோ அல்லது ராஜபக்ஷவோ யாரென்று கண்டறியப்படவில்லை.

கடந்த கால அரசாங்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்கள் மற்றும் குற்றவாளிகளைப் பாதுகாத்து வந்துள்ளனர். மைத்திரி - ரணில் [illegible] சஜித் மற்றும் கோட்டா - ரணில் - ராஜபக்ஷ ஆகிய கூட்டுக்களின் அரசாங்கங்கள் குற்றவாளிகளைப் பாதுகாத்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போதைப்பொருளுடன் நிமல் லான்சா கைதான போது ஹெலிகொப்டரில் சென்று அவரைத் தழுவிக்கொண்ட சம்பவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொலைகாரர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு பொலிஸ்பாதுகாப்பு வழங்குவது எந்தவொரு நாகரீக நாட்டிலும் இல்லை என்று குறிப்பிட்ட அவர், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தவொரு குற்றவாளியையும் பாதுகாக்காது என்றும் அனைவரும் [illegible] முன்னிறுத் [illegible] வர்கள் என்றும் உறுதியளித்தார். (ம-7)

# சி.ஐ.டியின் பொறுப்பில் கெஹெல்பத்தர பத்மே

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பிலுள்ள கெஹெல்பத்தர பத்மே அந்தத் திணைக்களத்திலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்படமாட்டார் என வழங்கப்பட்ட உறுதி மொழியை டிசம்பர் 2 ஆம் திகதி வரை நீட்டித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (23) உத்தரவிட்டது.

தனது மகனின் பாதுகாப்பை உறுதி செய்ய உத்தரவிடக் கோரி கெஹெல்பத்தர பத்மேவின் தாயார் தாக்கல் செய்த ரிட் மனு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த பெரேராவின் இணக்கத்துடன் உறுதிமொழி நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
## பகுதி VI

30

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

10. களனி, 11. அவிஸ்சாவெல்லை, 12. கோட்டை, 13. ஹொறனை, 14. மொறட்டுவை, 15. பாணந்துறை,16. களுத்துற,17. மத்துகமை, 18. அகலவத்தை.

மத்திய மாகாணத்தேர்தல் தொகுதிகள் (14 தொகுதிகள்) 19. தம்புள்ளை, 20. மாத்தளை, 21. மினிப்பே, 22. வத்தேகம, 23. கடுகண்ணாவை (இரட்டை அங்கத்தவர்கள் தொகுதி), 24. கண்டி, 25.கலஹா, 26.கம்பளை, 27. மத்துரட்டை, 28. நுவர எலியா, 29. தலவாக்கலை, 30.கொட்டகல்லை, 31. நாவலப்பிட்டி, 32. மஸ்கெலியா.

தென் மாகாணத்தேர்தல் தொகுதிகள்
(11 தொகுதிகள்)

33. அம்பலாங்கொடை-பலபிட்டி (இரட்டை அங்கத்தவர்கள் தொகுதி), 34. பத்தேகம, 35. உடுகம, 36. காலி, 37.வெலிகம, 38. அக்குரஸ்ஸ, 39. மாத்தறை, 40. ஹக்மன, 41. தெனியாய, 42. பெலியத்தை, 43. ஹம்பாந்தோட்டை,

வட மாகாணத்தேர்தல் தொகுதிகள்
(9 தொகுதிகள்)

44. ஊர்காவற்றுறை, 45. வட்டுக்கோட்டை, 46. காங்கேசன்துறை, 47. யாழ்ப்பாணம், 48. கோப்பாய், 49. பருத்தித்துறை, 50. சாவகச்சேரி, 51. மன்னார், 52. வவுனியா.

கிழக்கு மாகாணத்தேர்தல் தொகுதிகள் (7 தொகுதிகள்)

53. திரிகோணமலை, 54. மூதூர், 55. கல்குடா, 56. மட்டக்களப்பு, 57. பட்டிருப்பு, 58. கல்முனை, 59. பொத்துவில்.

வடமேல் மாகாணத்தேர்தல் தொகுதிகள்
(10 தொகுதிகள்)

60. புத்தளம், 61. நிக்கவரட்டிய, 62. தொடங்கஸ்லந்த, 63. குருநாகலை, 64.தம்பதெனியா, 65.வாரியப்பொலை, 66. தந்தகமுவ, 67. பிங்கிரிய, 68. சிலாபம், 69. நாத்தாண்டிய.

வடமத்திய மாகாணத்தேர்தல் தொகுதிகள்
(5 தொகுதிகள்)

70. மதவாச்சி, 71.அனுராதபுரம், 72. கலாவெவ, 73.ஹொறவப்பொத்தான, 74. பொலன்னறுவை.

ஊவா மாகாணத்தேர்தல் தொகுதிகள்
(6 தொகுதிகள்)

75. அமுத்நுவர, 76. பதுளை (இரட்டை அங்கத்தவர்கள் தொகுதி), 77. பண்டாரவளை, 78.வெலிமடை, 79. ஹப்புத்தளை, 80. புத்தள.

சப்பிரகமுவ மாகாணத்தேர்தல் தொகுதிகள்
(10 தொகுதிகள்)

81. மாவன்னல்லை, 82.கேகாலை, 83.டெடிகம, 84.ரூவான்வெல்லை, 85.தெஹியோவிற்ற, 86. கிரிஎல்லை, 87. இரத்தினபுரி, 88. நிவித்திகலை, 89. பலாங்கொடை.

பாராளுமன்றம் மொத்தமாக உறுப்பினர்கள் எண்ணிக்கை

இந்த 89 தேர்தல் தொகுதிகளிலிருந்து (இரட்டை அங்கத்தவர்கள் உட்பட) 95 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதைவிட மேலும் 6 நியமன உறுப்பினர்கள் மகாதேசாதிபதியால் (ஆளுநரால்) நியமிக்கப்படுவார்கள். எனவே பாராளுமன்றம் மொத்தமாக 105 உறுப்பினர்களை கொண்டிருக்கும். அரசியலமைப்பின்படி நியமிக்கப்பட்ட ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் தமிழர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

தேர்தல் முறை

அன்றைய காலத்தில் இலங்கையிலிருந்த தேர்தல் முறையானது ஒப்பிடுகையில் பெரும்பான்மை அடைந்தவர் (First Past the Post - FPP) வெற்றி பெறும் முறையாகும். அதாவது ஒரு தேர்தல் தொகுதியில் கூடுதலான வாக்குகள் பெற்றவர் வெற்றி பெற்றவராவர்.

ஒரு குறிப்பிட்ட சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பரந்த பிரதேசத்தில் அவர்களிலும் வேறுபட்ட இன்னொரு சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் அப்பரந்த பிரதேசத்தின் சில இடங்களில் கூடுதலாக சேர்ந்து வாழ்ந்தால், அச் சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் வரக்கூடியதாக தேர்தல் தொகுதிகள் அமைய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இக் குழுவினால் 5 பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன.

இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணித முறையில் பார்த்தால் ஒரு க்ட்சிக்கு அத்தொகுதியிலுள்ள சனத்தொகைஃ வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 34 சதவீத வாக்குகளைக் கொண்டிருந்தால் மட்டுமே அக் கட்சியிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்பட வாய்ப்புகள் உண்டு.

இதேபோல் மூன்று அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணிதமுறையில் பார்த்தால் ஒரு கட்சிக்கு அத்தொகுதியிலுள்ள சனத்தொகை ஃ வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 26 சதவீத வாக்குகளைக் கொண்டிருந்தால் மட்டுமே அக் கட்சியிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்பட வாய்புகள் உண்டு. இவற்றை கருத்தில் கொண்டே இவ் ஐந்து பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகளும் உருவாக்கப்பட்டன.

அவ்வாறு உருவாக்கப்பட்ட தொகுதிகள் பின்வருமாறு. மத்திய கொழும்பு - 3 அங்கத்தவர்கள் தொகுதி, அம்பலாங்கொடை-பலப்பிட்டிய, பலாங்கொடை, கடுகண்ணாவை மற்றும் பதுளை இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள். மற்றவை எல்லாம் ஒற்றை அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் ஆகும். எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் 95 பிரதிநிதிகளும் 89 தேர்தல் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் சொல்லப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

(தொடரும்)

மாகாண மட்டத்தில் அட்டவணை-1

| மாகாணம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியர் (முஸ்லீம் தவிர) | முஸ்லீம் | தீர்மானிக்க முடியாத மற்றும் ஏனைய இனத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மேல் | 16 | 1 | 1 | 1 | 1 | 20 |
| மத்திய | 8 | 1 | 4 | 1 | 1 | 15 |
| தென் | 11 | - | - | - | 1 | 12 |
| வட | - | 8 | - | - | 1 | 9 |
| கிழ் | - | 3 | - | 3 | 1 | 7 |
| வடமேல் | 9 | - | - | 1 | - | 10 |
| வட மத்திய | 4 | - | - | - | 1 | 5 |
| ஊவா | 5 | - | 2 | - | - | 7 |
| சப்பிரகமுவ | 8 | - | 1 | - | 1 | 10 |
| மொத்தம் | 61 | 13 | 8 | 6 | 7 | 95 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட - கிழக்கில்...

காரணமாக பலத்த காற்று, கனமழை மற்றும் கடல் கொந்தளிப்பு குறித்து வானிலை ஆய்வு நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு வெளியிடப்பட்ட எச்சரிக்கை அறிவிப்பு அடுத்த 24 மணி நேரத்திற்கு செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடல் பகுதிகளில் பயணிக்கும் மீன்பிடிப் படகுகளுக்கு இந்த எச்சரிக்கை பொருந்தும் எனத் தெரிவித்துள்ளது.

மேலும் கடல் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் கடல் பகுதிகள் சில நேரங்களில் கொந்தளிப்பாக மாறக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காற்றின் வேகம் சில நேரங்களில் மணிக்கு 55 - 65 கி.மீ வரை அதிகரிக்கும் எனவும், அடுத்த 24 மணி நேரத்திற்குள் தென்கிழக்கு அரபிக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வட கிழக்கு நோக்கி நகர வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது. (ம-7)























## இரத்த வாந்தி...

என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று வியாழக்கிழமை (23) காலை 8.00 மணியளவில் குறித்த நபர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் வலந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் 9.00 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் முற்பகல் 10.00 மணியளவில் அவர் உயிரிழந்தார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## 13 பில்லியன்...

அதன் பிரகாரம் இவ்வாண்டின் முதல் 9 மாதங்களில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாய் 12,986.52 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள தாக ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் (EDB) தெரிவித்துள்ளது.

இது 2024ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 7% வலுவான அதிகரிப்பை பிரதிபலிக்கிறது என்று EDB தனது அண்மைய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதிலும் குறிப்பாக கடந்த செப்ரெம்பரில் மட்டும் பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டையும் உள்ளடக்கிய மொத்த ஏற்றுமதிகள் 1,469.75 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

இது 2024 செப்ரெம்பர் மாதத்தை விட ஆண்டுக்கு ஆண்டு 12.33% வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மீன் பிடிக்கச்...

(வயது-44) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

குறித்த கடற்றொழிலாளி நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தொழிலுக்காகக் கடலுக்குள் சென்றுள்ளார். அந்நிலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் தனது மனைவிக்கு தொலைபேசி ஊடாக தனக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து, அவரது மனைவி கடற்றொழில் சமாசத்திற்கு அறிவித்ததையடுத்து, கரையில் இருந்து கடற்றொழிலாளர்கள் சிலர் கடலுக்குள் சென்று குறித்த கடற்றொழிலாளியை மீட்டு கரை திரும்பினர்.

அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,33,60,316)

## செயல்திறன்...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்க நிறுவனங்கள் சில வினைத்திறனுடன் செயலாற்றவில்லை. குறிப்பாக வினைத்திறனுடன் செயற்படாத 33 அரச நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களில் பணியாற்றும் ஊழி யர்களுக்கு சம்பளம் வழங்குவதிலேயே இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

எனவே குறித்த 33 அரச நிறுவனங்களைக் கலைத்து விடுவது அல்லது ஏனைய அரச நிறுவனங்களோடு இணைப்பது பற்றி ஆலோசித்து வருகிறோம். மிக விரைவில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

சில அரச நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் செயலாற்றவில்லை.

அண்மையில் இரத்தினபுரி மாவட்டத்திற்கு விஜயம் செய்தேன். அங்கு நாற்றுகளை மானியமாக வழங்குவதற்கு தனித்தனி உத்தி யோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு உத்தியோகத்தர் செய்யக்கூடிய வேலையை மூன்று உத்தியோகத்தர்கள் செய்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

எனவே எதிர்காலத்தில் இயங்கு நிலையற்ற அரச நிறுவனங்கள் இல்லாது செய்யப்படும் அல்லது தேவை கருதி புதிய அரச நிறுவனங்கள் உருவாக்கப்படும் என்றார். (ம-7)

## 1947...

1947 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் விஜேபால, போதைப் பொருள் மற்றும் பாதாள உலக வலையமைப்புகளின் முக்கிய பகுதியாக ஆயுதங்கள் இருப்பதாகக் கூறினார்.

சில பாதாள உலகக் கும்பல்கள் இன்னும் ஆயுதங்களை வைத்திருப்பதால் நாடு முழுவதும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருவதாக அவர் மேலும் கூறினார்.

முன்னர் ஒரு இராணுவ முகாமில் இருந்து 78 T-56 துப்பாக்கிகள் பாதாள உலகக் கும்பல்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அவற்றில் 36 ஏற்கெனவே அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்தார். (ம-7)

## வடக்குக் கிழக்...


மன்றத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

விடுவிக்கப்பட்ட காணிகளில் 86.24 ஏக்கர் தனியார் காணிகளும் இராணுவப் பயன்பாட்டில் இருந்த 586 ஏக்கர் காணிகளும் அடங்குவதாக அவர் கூறினார்.

குறித்த காணிகள் தொடர்பான தகவல்கள், பாதுகாப்புச் சபை மற்றும் பாதுகாப்புப் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு இந்த விடுவிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் பிரதி அமைச்சர் கூறினார்.

கிழக்கில் மட்டும் 34.58 ஏக்கர் அரசாங்கக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார். (ம-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம், வடமராட்சி, பருத்தித்துறை, அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் அருகாமையில் 27 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- 16 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு
- அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயம் 100m தூரம்.
- பருத்தித்துறை BUS நிலையம் 1½ K.m
- நெல்லியடி BUS நிலையம் 1½ K.m
- மேட்டுநிலம், நன்னீர் ஊற்று, குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ஒரு பரப்பின் விலை வீதி முகப்புடன் 10 இலட்சம் ரூபா.
- இரண்டாம் துண்டு 7 இலட்சம் ரூபா.
- 3 ஆம் துண்டு 5 இலட்சம் ரூபா.
- பார்வையிடும் நேரம் : காலை 08 : 00 - மாலை 06 :00

(5717)

**076 860 2770, 076 987 8617**


## லசந்தவுக்காக கறுப்பு உடையில் பிரசன்னமான ஐ.ம. சக்தியினர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சியினர் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கறுப்பு உடையுடன் பிரசன்னமாகி வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று முன்தினம் (22) கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா இந்தத் திட்டத்தை முன்மொழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-7)

## கருணையம்பதி ஸ்ரீவீரபத்திர காளியம்மன் ஆலய கட்டட நிதிக்காக 20.10.2025 தீபாவளி தினத்தன்று நடாத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு இல : 1782 - TV

2 ஆம் பரிசு இல : 7105 - தொலைபேசி

3 ஆம் பரிசு இல : 7116 - மின்விசிறி

**10 ஆறுதல் பரிசுகள் - மின் கேற்றில்கள்**

**891, 184, 2787, 1145, 7117, 1754, 1319, 2646, 4956, 688**

(C-4176)

நிர்வாகத்தினர்


**உடனடி வேலைவாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மானிப்பாய், மட்டக்களப்பு, கொடிகாமம், யாழ்ப்பாணம் (Metro Branch), நெல்லியடி, திருகோணமலை, புத்தூர், பருத்தித்துறை, கிளிநொச்சி, சாவகச்சேரி, சங்கானை, வல்வெட்டித்துறை

(C-4177)

**V2 TRAVELS** 076 1410725, 076 8226236

v2vacancies@gmail.com

**கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை**

5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4177)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மானிப்பாய், மட்டக்களப்பு, கொடிகாமம், யாழ்ப்பாணம் (Metro Branch), நெல்லியடி, திருகோணமலை, புத்தூர், பருத்தித்துறை, கிளிநொச்சி, சாவகச்சேரி, சங்கானை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

**யாழ்ப்பாணத்தில் Voyzant**

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்

- விமான பயணச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதி
- விசா சேவைகள்
- வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)

077 284 9535, 021 222 6866

(C-4109)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை நவரத்தினம்



மலர்வு 1949.02.14 உதிர்வு 2025.10.22

கிளிநொச்சி முல்லையடி பளையைப் பிறப்பிடமாகவும் இல. 477/5ம் யூனிட் இராமநாதபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நவரத்தினம் அவர்கள் கடந்த 22.10.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் சுப்பிரமணியம் (ஓய்வு நிலை அதிபர்) - கனகமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும் சிவஞானசுந்தரம்(பிரித்தானியா), காலஞ்சென்ற தங்கமலர், அரியமலர்(மிருசுவில்), நீலாம்பிகை(பளை), காலஞ்சென்ற றஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்சினி(பிரித்தானியா), ரவிசங்கர்(பிரித்தானியா), பிரசாந்தன்(பிரித்தானியா), காலஞ்சென்ற ரகுராம் ஆகியோரின் அன்புத் தந்தையும் கேசவன்(பிரித்தானியா), கார்த்திகா(பிரித்தானியா), நிலாந்தி(முன்னாள் இராமநாதபுரம் ம.வி ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வராசா, காலஞ்சென்ற யோகராசா(முன்னாள் பலநோக்குக் கூட்டுறவு சங்க முகாமையாளர்), வரதராசா, நடராசா(ஓய்வுநிலை அதிபர்), விமலராசா, ஜெயராசா(கனடா), சாந்தினி, தேவி(கனடா), வசந்தினி(ஜெர்மனி), ஜெயந்தி(பிரித்தானியா), சுகந்தினி(நோர்வே), சாந்தினி (பிரித்தானியா), முருகமூர்த்தி, சிவசம்புநாதன், முத்துலிங்கம், இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் டிவின்யன், டிலன், தன்னியா, அக்சயா, டனிசன், கிசோறிகா, அகல்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 24.10.2025 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் மம்மில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


பழைய கண்டி வீதி,
இராமநாதபுரம்.

(5719)

தகவல் : குடும்பத்தினர்
077 654 9609

## மரண அறிவித்தல்

மலர்வு 05 - 04 - 1937



உதிர்வு 22 - 10 - 2025

### நாகமுத்து சுப்பையா

**(அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், பருத்தித்துறை)**

மறவன்புலோவினைப் பிறப்பிடமாகவும் புலோலி கிழக்கு வராத்துப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சுப்பையா அவர்கள் கடந்த 22.10.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - பொன்னாச்சி தம்பதிகளின் மகனும் அண்ணாமலை - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, சின்னத்தம்பி, கந்தையா, செல்லையா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் குருபரன், கலைமகள், கலைச்செல்வி, பிரணவன், திருமகள், குலமகள், ரமணன், பராசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரவதனி, செல்வரத்தினம், செந்திநாதன், சுகிர்தா, இளம்பிறைநாதன், சிறீமீனசிவா, கபிலன் ஆகியோரின் மாமனாரும் தீரன், ஆதிரன், சாம்பவி, பகதாரவி, கௌரிகன், பிரணிதா, பூர்னிதா, திலோத்தமா, சங்கனி, ஆசினி, மாதுரி, லவன், ஜான்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான இராசரத்தினம், லோகேஸ்வரன், சுந்தரலிங்கம் மற்றும் பத்மாவதி, தனவதி, தெய்வேந்திரராஜா, பஞ்சநாதன், பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
077 643 8868, 075 186 3382

(C-4175)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.